வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 06.01.2024 சனிக்கிழமை இதழ் : 06 பக்கங்கள் : 12




# வடக்கு மாகாணத்திலிருந்து இந்தியாவுக்கு மின்சாரம்!

## வவுனியாவில் ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



வவுனியா, ஜனவரி 06

வடக்கு மாகாணத்தில் மீளப்புதுப்பிக்கக்கூடிய சக்தி மூலமான மின்சார உற்பத்தி திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படவுள்ளன. இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை அளவை கணக்கிடும்போது எஞ்சியதை இந்தியாவுக்கு விற்பனை செய்து பணம் பெறக்கூடிய நிலை உள்ளது. இதற்கான பேச்சுகள் ஆரம்பிக்கப்பட் டுள்ளன என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

11

## 13ஆவது திருத்தச் சட்டத்தின் அதிகாரங்கள் போதுமானவை!

*யாழில் ஜனாதிபதி ரணில்*

யாழ்ப்பாணம், ஜன. 06

13 ஆவது திருத்தத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் போதுமானவை. அவற்றில் மத்திய அரசாங்கம் தலையிடாது என்றும் யாழ். மாவட்ட தொழில் வல்லுநர்களுடனான சந்திப்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

11

## யாழ். பல்கலைக்கழகத்தினர் ஜனாதிபதியுடன் சந்திப்பு!

*மாணவர் பிரதிநிதிகளும் பங்கேற்பு*

யாழ்ப்பாணம், ஜன. 06

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிர்வாகம், மாணவர்களுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விசேட கலந்துரையாடலில் நேற்று ஈடுபட்டார்.

நான்கு நாள் பயணமாக வடக்குக்கு வந்த

11

## ஜனாதிபதியை சந்திக்க போராட்டம் வவுனியாவில் பெண்கள் இருவர் கைது!

வவுனியா, ஜன. 06

ஜனாதிபதியின் வவுனியா வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து போராடிய அதேசமயம் அவரை சந்தித்துப் பேச வேண்டும் என்று கோரி வவுனியா நகர சபை வளாகத்துக்குள் செல்ல முயன்ற காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் இருவர் கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்களில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்கத்தின்



தலைவி சி.ஜெனிற்றாவும் மற்றும் ஒருவரும் அடங்குவார்.

நான்கு நாள் பயணமாக வடக்குக்கு வந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று வவுனியா

11

## பெப்ரவரி முதல் வாரத்தில் மின் கட்டணம் குறைப்பு!

*மின்சக்தி இராஜாங்க அமைச்சர்*

கொழும்பு, ஜன. 06

மின்சார கட்டணத்தை குறைப்பதற்கான உரிய தரவுகள் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் வழங்கப்பட்டுள்ளன. இதன்படி பெப்ரவரி மாதம் முதல் வாரத்தில் மின்சாரக் கட்டணம் மீளாய்வு செய்யப்படும் என்று மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த தெரிவித்தார்.

புதிய உற்பத்தித் திட்டத்தின்படி, 2024 ஆம் ஆண்டில் புதுப்பிக்கத்தக்க வலுசக்தியிலிருந்து சுமார் 600 மெகாவாட் மின்சாரம் பெறப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே

11

## சிமெந்தின் விலை உயர்வு

கொழும்பு, ஜன. 06

வற் வரி அதிகரிப்பால் சிமெந்தின் விலையும் ஒரு பைக்கெற் 150 ரூபாய் முதல் 350 ரூபாய் வரை அதிகரித்துள்ளதாக உற்பத்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

இந்த விலை அதிகரிப்பால் 50 கிலோ சிமெந்து பைக்கெற்றின் விலை 2,300 - 2,450 ரூபாய் வரை நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

வரி அதிகரிப்புக்கு முன்னர் சில நிறுவனங்களில்

11

## பிரதான கல்வி கேந்திர நிலையமாக வடக்கு!

வவுனியா, ஜன. 06

நாட்டில் பிரதான கல்வி கேந்திர நிலையங்களில் ஒன்றாக வடக்கு மாகாணமும் உருவாக்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று நடந்த ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில், வவுனியா, முல்லைத்தீவு

11

## தமிழரசின் தேசிய மாநாடு திட்டமிட்டபடி நடைபெறும்!

*பொதுச் செயலாளர் சத்தியலிங்கம்*

வவுனியா, ஜன. 06

இலங்கை தமிழரசு கட்சியின் 17ஆவது தேசிய மாநாடு ஏற்கனவே திட்டமிட்ட தினங்களில் நடைபெறும் என்று கட்சியின் பொது செயலாளர் ப. சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

தமிழரசு கட்சியின் தேசிய மாநாடு தொடர்பில் அவர் அனுப்பி வைத்த செய்திக்

11

## ஜனாதிபதி வேட்பாளராக தம்மிக பிரதமர் வேட்பாளராக நாமல்

கொழும்பு, ஜன. 06

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக தம்மிக பெரேராவும், பிரதமர் வேட்பாளராக நாமல் ராஜபக்ஷவும் நியமிக்கப்படுவார்கள் என்று ராஜபக்ஷ தரப்புக்கு நெருக்கமானவரும் ரஷ்யாவுக்கான முன்னாள் இலங்கை தூதுவருமான உதயங்க வீரதுங்க தெரிவித்துள்ளார்.

மேலும், ஜனாதிபதித் தேர்தலில் சிறீ லங்கா பொது ஜன பெரமுனவின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்கவை

11

## நாட்டில் முதன்முதலாக ஜல்லிக்கட்டு போட்டி!

*திருமலையில் இன்று நடக்கிறது*

திருகோணமலை, ஜன. 06

நாட்டில் முதன்முதலாக ஜல்லிக்கட்டு போட்டி நடைபெறவுள்ளது. திருகோணமலை - சம்பூரில் நடைபெறவுள்ள இந்தப் போட்டியில் 200 காளைகளும் 100இற்கும் மேற்பட்ட மாடுபிடி வீரர்களும் பங்கேற்கவுள்ளனர்.

இந்தப் போட்டியில் பங்கேற்பதற்காக தமிழகத்திலிருந்தும் மாடுபிடி வீரர்கள் வந்துள்ளனர்.

11


## மூதூரில் புத்தர் சிலை நிறுவப்பட்டது! தொல்லியல் திணைக்கள ஆதரவுடன்!!

திருகோணமலை, ஜன. 06

திருகோணமலை மூதூர் 64ஆம் கட்டை மலை எனப்படும் ராஜவந்தான் மலையில் புத்தர் சிலை ஒன்று நிறுவப்பட்டுள்ளது. அந்தப் பகுதியில் தொல்லியல் திணைக்களத்தின் ஆதரவுடன் விகாரை ஒன்று அமைக்கப்பட்டு வரும் நிலையில் இந்தப் புத்தர் சிலை நிறுவப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் விகாரை அமைக்கப்படுவதற்கு மக்கள் எதிர்ப்பு தெரிவித்து வந்த நிலையிலேயே இந்தப் புத்தர் சிலை நிறுவப்பட்டுள்ளது.

11



## இப்படியும் நடக்கிறது

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைத் தெரிந்தவர்கள் அவரைப் பற்றிக் குறிப்பிடுவது, 'இரண்டு தடிகள் ஒன்றாகக் கிடப்பது அவருக்குப் பிடிப்பதில்லை' என்று.

அதாவது மற்றையவர்களிடையே - குறிப்பாகத் தனக்கு அரசியல் ரீதியாகக் குடைச்சல் தருகின்றவர்களிடையே பிரிவினையை ஏற்படுத்துவதில் அவரை விஞ்ச ஆட்கள் இல்லை என்பார்கள்.

அதனால்தானோ தெரியவில்லை, எந்தக் கட்சிகளிடையே பிரிவு ஏற்பட்டாலும் அது எல்லாம் ரணிலின் வேலைதான் என்று கூறுவார்கள்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தில் கருணா பிரிந்த போதும் அதனைத்தான் கூறினார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப் பிலிருந்து தமிழரசு பிரிந்து அது இரண்டானபோதும் அப்படித்தான் கூறினார்கள். அதில், எவ்வளவு உண்மை இருக்கிறதோ தெரியவில்லை, ஆனால் அப்போதும் அப்படித்தான் கூறப்பட்டது.

தனது அரசியலை சூனியம் ஆக்கிய சஜித் பிரேமதாஸவின் கட்சியை பிரித்து அதிலிருந்து சிலரை அவர் தன்னோடு இணைத்துக் கொள்ள முயற்சி செய்கிறார் என்று நீண்ட காலமாகக் கூறப்பட்டு வந்த போதிலும் இதுவரை அப்படி எதுவும் நடக்கவில்லை.

ஐக்கிய மக்கள் சக்தியின் ராஜித சேனாரத்ன அவருடன் இணைவதாக நீண்டகாலமாகக் கூறப்பட்டுவந்த போதிலும் - அவர் அதற்குத் தயாராக இருந்தபோதிலும் - அவர் விரும்பியவாறு சுகாதார அமைச்சை வழங்கி அவரை உள்ளே எடுக்கும் வேலையை ரணில் தாமதப்படுத்தியே வருகின்றார்.

அவரைப் பொறுத்தவரை தனி ஒருவரை அங்கிருந்து எடுப்பதைவிட ஒரு கோஷ்டியை எடுக்கவேண்டும் என்பதுதான் இலக்கு என்று அவருக்கு நெருக்கமானவர்கள் கூறிவருகின்றனர்.

இப்போது, அவர் தனது ஆட்டத்தை பிரதான எதிர்க்கட்சியாக வளர்ந்து நிற்கும் ஜே. வி. பி. மீதே திருப்பியிருக்கிறார் என்கின்றன தெற்கு செய்திகள்.

ஜே. வி. பி. அடுத்த தேர்தலில் தேசிய மக்கள் சக்தி என்ற பெயரிலேயே களம் இறங்க விருப்பது நமக்கெல்லாம் தெரிந்ததுதான்.

தேசிய மக்கள் சக்தி என்பது ஜே. வி. பியை பிரதான கட்சியாகக் கொண்ட ஒரு கூட்டணி என்றாலும். அதில் வேறு கட்சிகள் எதுவும் இல்லை. அதில் ஏராளமான அமைப்புகளும், பிரபல்யமான தனி நபர்களுமே (புத்திஜீவிகள்) இருக்கின்றனர்.

ஜே. வி. பி. என்றதும் தெற்கில் சிங்கள மக்களுக்கு ஞாபகம் வருவது அவர்கள் ஆயுதங்களுடன் அரசியல் செய்தபோது நிகழ்த்திய கொடூரங்கள்தான் என்றும் அதனாலேயே தேசிய மக்கள் சக்தி என்ற பெயரிலே தேர்தலை சந்திக்க வேண்டும் என்பதுவுமே அந்தக் கட்சியில் உள்ள புத்திஜீவிகளின் ஒட்டுமொத்த விருப்பு.

ஆனால், அவ்வாறு தேசிய மக்கள் சக்தியிலும் ஜே. வி. பியின் தலைவர் ஒருவர் போட்டியிடுவதிலும் பார்க்க - தேசிய மக்கள் சக்தியிலுள்ள புத்திஜீவிகளில் ஒருவரான அவர்களின் தேசியப்பட்டியல் எம்.பியான ஹிரினி அமரசூரியவை களம் இறக்க வேண்டும் என்றும் அதுவே கட்சிக்கு நல்லது எனவும் தேசிய மக்கள் சக்தியில் உள்ள பலம்பொருந்திய புத்திஜீவிகள் குழு ஒன்று வலியுறுத்தத் தொடங்கியிருக்கின்றதாம்.

அது மாத்திரமன்றி, தேசிய மக்கள் சக்தியில் வேறு கட்சிகளை இணைக்கக்கூடாது என் பதில் பிடிவாதமாக இருக்கும் ஜே. வி. பியின் கொள்கையையும் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் தேசிய மக்கள் சக்திக்கு வெளியே இருக்கின்ற முற்போக்கான கட்சிகளையும் அந்தக் கூட்டணியில் இணைக்க வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தத் தொடங்கிருக்கின்றனராம்.

இதனால், அந்த முகாமிலும் இப்போது சலசலப்புக் கேட் கத் தொடங்கியிருக்கின்றது.

அதனால்தான் தற்போது நடக்கும் தேசிய மக்கள் சக்தியின் பிரசாரக் கூட்டங்கள் எதிலுமே ஹரினி அமரசேகரவோ அல்லது மற்றைய புத்தி ஜீவிகளையோ காண முடியவில்லை என்கின்றன தெற்கின் செய்திகள்.

தேசிய மக்கள் சக்தியின் முக்கிய முடிவுகளை எடுக்கின்ற சட்டத்தரணி ஒருவரை ஜனாதிபதி சட்டத்தரணி ஆக்கி, அவரை வைத்து ரணில் ஆட்டத்தைத் தொடங்கியிருக்கிறார் என்றும் அந்தச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜே. வி. பியின் தலைவர்கள் சிலர் தொடர்பாகவும் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் தொடர்பாகவும் பல்வேறு புகார்கள் தயாராகி வருகின்றன எனவும் அவை வெளிக்கிளம்பத் தொடங்கியதும் அந்தக் கட்சிக்குள் பூகம்பம் வெடிக்கலாம் என்றும் எதிர்பார்த்து காத்திருக்கிறார்கள் தெற்கு ஊடகவியலாளர்கள்.!

- ஊர்க்குருவி.

# போதைப்பொருளுடன் கைதான இளைஞர்கள் புனர்வாழ்வுக்கு!

## முல்லைத்தீவு நீதிமன்றம் அனுப்பியது

*முல்லைத்தீவு, ஜன. 06*

புதுக்குடியிருப்பில் ஐஸ் போதைப் பொருளுடன் கைதான இளைஞர்கள் இருவரை புனர்வாழ்வு நிலையத்துக்கு அனுப்பி வைக்குமாறு முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து தேராவில் இராணுவ சிற்றுண்டிச்சாலைக்கு அருகாமையில் நடத்திய விசேட சோதனை நடவடிக்கையில் இருவர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

அவர்களிடம் இருந்து 2 கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது. இந்த சம்பவத்தில் புதுக்குடியிருப்பு 10 ஆம் வட்டாரம், உடையார்கட்டு பகுதிகளை சேர்ந்த 22, 27 வயதுடைய இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் நேற்று முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். இதன் போது, இருவரையும் பொலநறுவை - கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்திற்கு அனுப்புமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ஐ)

# சுயாதீன எம். பிக்கள் பலர் எம்முடன் இணைவார்கள்!

## பொதுஜன பெரமுன சொல்கிறது

*கொழும்பு, ஜன. 06*



பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணும், மக்களால் ஏற்றுக் கொள்ளும் நபரை ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்குவோம். பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயல்படுபவர்களில் பெரும்பாலானோர் பொதுஜன பெரமுனவுடன் ஒன்றிணைவார்கள் என ஆளும் தரப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபே குணவர்தன தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் கட்சி பணிமனையில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், அரசமைப்பின் பிரகாரம் இந்த ஆண்டு ஜனாதிபதி தேர்தல் இடம்பெறும். நாடளாவிய ரீதியில் வெகு விரைவில் அரசியல் கூட்டங்களை நடத்துவோம். பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ நாடு திரும்பியவுடன் பொது கூட்டங்கள் தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படும்.

ஜனாதிபதி தேர்தலில் சிறீலங்கா பொதுஜன பெரமுன தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கும் என்று ஆளும் தரப்பின் ஒருசிலர் குறிப்பிடுவது அவர்களின் தனிப்பட்ட நிலைப்பாடே தவிர கட்சியின் நிலைப்பாடல்ல. ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் சகல தரப்பினருடன் வெளிப்படையான பேச்சில் ஈடுபடுவோம்.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணும் வகையில் மக்களால் ஏற்றுக் கொள்ளும் நபரை ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறக்குவோம்.

ஜனாதிபதி தேர்தலை இலக்காகக் கொண்டு அரசியல் கூட்டணிகள் தற்போது தோற்றுவிக்கப்படுகின்றன. கட்சி தாவல்களும் இடம்பெறுகின்றன. 2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இவ்வாறான தன்மை காணப்பட்டது. கட்சி தாவல் என்பது இங்கு இயல்பானதாக உள்ளது. கட்சி என்ற ரீதியில் பலமாக உள்ளோம். பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் பலர் எம்முடன் இணைவார்கள் - என்றார்.

## நிர்வாக கூட்டம்

*யாழ்ப்பாணம், ஜன. 06*

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தின் நிர்வாக சபை கூட்டம் இன்று சனிக்கிழமை மதியம் 1.30 மணிக்கு சங்கத்தின் தலைவர் சைவப் புலவர் சி. கா. கமலநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இணுவிலில் உள்ள சங்கத்தின் பணிமனையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் சைவ மாநாடு, பட்டமளிப்பு விழா, ஆய்வுக்கட்டுரை முன்வைப்பு, சைவநாதம் மலர் வெளியீடு, 2024ஆம் ஆண்டுக்கான சைவப்புலவர், இளம் சைவப்புலவர் பரீட்சைகள், சிவதீட்சை வழங்குதல் போன்ற முக்கியமான தீர்மானங்கள் கலந்துரையாடப்படவுள்ளன என்று சங்கத்தின் செயலாளர் சைவப்புலவர் செ. த. குமரன் அறிவித்துள்ளார். (ஐ)

# கற்பிட்டி விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

*புத்தளம், ஜன. 06*

பாலாவி - கற்பிட்டி பிரதான வீதியில் கரம்பை பகுதியில் நேற்று இடம்பெற்ற வீதி விபத்தில் நபர் ஒருவர் உயிரிழந்தார்.

மதுரங்குளி, கரிக்கட்டை பகுதியைச் சேர்ந்த விஜயசிங்க ஆராச்சிகே சஞ்சீவ அனுர மங்கள குமார (வயது 44) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

கற்பிட்டி பகுதியில் இருந்து பாலாவியை நோக்கிப் பயணித்த முச்சக்கர வண்டியும் எதிர்த் திசையில் பயணித்த லொறியும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது.

இந்த விபத்தில் படுகாயமடைந்த முச்சக்கர வண்டியில் பயணித்த நபரை அங்கிருந்தவர்கள் உடனடியாக சிகிச்சைக்காக புத்தளம் தள வைத்திய சாலையில் அனுமதித்தனர்.

எனினும், அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என்று மருத்துவர்கள் தெரிவித்தனர்.

விசாரணைகளை நுரைச்சோலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# சட்டவிரோதமாக கைபேசிகளை இறக்குமதி செய்த இருவர் கைது!

*கொழும்பு, ஜன. 06*

சட்டவிரோதமான முறையில் இறக்குமதி செய்யப்பட்டு கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து வரி செலுத்தாமல் வெளியே கொண்டு செல்லப்பட்ட 323 கைபேசிகள் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த சம்பவத்தில் இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளதோடு கைபேசிகளை ஏற்றிச் சென்ற வான் ஒன்றும் கொழும்பு - கட்டுநாயக்க நெடுஞ்சாலையில் வைத்து கைப்பற்றப்பட்டுள்ளது. (அ)

ஈழநாடு
Eelanadu
06.01.2024 சனிக்கிழமை
சோபகிருது வருடம், மார்கழி 21

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# திரு. ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்துக்கு...!

ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்திலுள்ள சிவில் சமூக பிரதிநிதிகளை சந்தித்திருக்கின்றார். 13ஆவது திருத்தச்சட்டம் வலுவான உள்ளூர் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்குப் போதுமான அதிகாரங்களை கொண்டிருக்கின்றது - அதனை பயன்படுத்துங்கள் என்று கூறியிருக்கின்றார். அரசியல் ரீதியில் நாங்கள் அதிகாரப்பகிர்வு தொடர்பில் பேசலாம் - நீங்களும் சட்டரீதியில் அனைத்து அதிகாரங்களையும் பெறலாம். ஆனால், அதனை பயன்படுத்தாவிட்டால் - அதிகாரப் பகிர்வின் பொருள் என்ன? - மேல் மாகாணம் மட்டும்தான் சொந்தமாக செலவழிக்கக்கூடிய நிலையில் இருக்கின்றது. 13ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக போதுமானளவில் அதிகாரங்கள் பகிரப்பட்டிருக்கின்றன. அதனைப் பயன்படுத்த வேண்டும் என்பதுதான் தனது கொள்கை நிலைப்பாடு என்றும் கூறியிருக்கின்றார் ரணில்.

13ஆவது திருத்தச் சட்டம் உச்சளவில் பயன்படுத்தப்பட வேண்டும் - அதிலிருந்து முன்னோக்கிப் பயணிக்க வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துகள் இல்லை - இந்த விடயத்தில் கடந்தகாலத்தில் தமிழ்த் தேசிய கட்சிகள் போதுமானளவில் செயல்பட்டிருக்கவில்லை என்பதும் உண்மைதான். ஆனால், 13ஆவது திருத்தச் சட்டத்தை உச்சளவில் பயன்படுத்துவதற்கான அரசியல் சூழலும் இருக்க வேண்டும். அதாவது, ஒருபுறம் சுயாதீனமாக செயல்படுங்கள் என்று கூறிவிட்டு, மறுபுறம் ஆளுநர்களின் ஊடாக தலையீடுகளை ஏற்படுத்துவதையே மத்தியிலுள்ள அரசாங்கங்கள் செய்து வந்திருக்கின்றன.

இங்கு ரணில் விக்கிரமசிங்க கவனிக்க வேண்டிய ஒரு விடயம் உண்டு. ரணில் போன்ற ஒரு தாராளவாதி, புத்திஜீவி, அதிகாரப்பகிர்வுக்கு ஆதரவானவர் ஜனாதிபதியாக இருக்கும்போது இவ்வாறான கூற்றுகளுக்கு பெறுமதி இருக்கலாம். ஆனால், தன்னையொரு பௌத்த - சிங்கள தலைவர் என்று பகிரங்கமாகக் கூறிய இருக்கின்ற அதிகாரங்களையும் பறிக்க வேண்டுமென்று எண்ணும் கோட்டாபய ராஜபக்ஷ போன்ற ஒருவரின் அதிகாரத்தின் கீழ் நாடு இருக்குமானால் என்ன நடக்கும்? அப்போது வடக்கு - கிழக்கு மாகாண சபைகள் தலையீடின்றி இயங்க முடியுமா?

இந்தப் பின்புலத்தில்தான் இந்திய - இலங்கை ஒப்பந்தத்துக்கு அமைவாக 13ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும் என்னும் கோரிக்கை எழுகின்றது. ஏனெனில், 13ஆவது திருத்தச்சட்டம் ஈழத் தமிழ் மக்களின் பாதுகாப்பு மற்றும் சமூக, பொருளாதார மேம்பாட்டை கருத்தில் கொண்டே கொண்டுவரப்பட்டது. ஈழத் தமிழ் மக்களை கருத்தில் கொண்டுதான் இந்திய - இலங்கை ஒப்பந்தம் நடைபெற்றது.

ஆனால், அன்றைய அரசியல் தவறுகளால் அதனை முழுமையாக அமுல்படுத்த முடியாமல் போயிருக்கலாம். ஆனால், அப்போது ஆட்சியிலிருந்த பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமே 13ஆவது திருத்தச் சட்டம் பலவீனமாக்கப்பட்டதற்கான முக்கிய காரணமாகும். விடுதலைப் புலிகள் அமைப்பும் பிரதான காரணம்தான். ஆனால் புலிகள் அமைப்புடன் எதற்காக பிரேமதாஸ அரசாங்கம் இரகசிய உடன்பாட்டை செய்தது? ஓர் அரசாங்கத்துக்கான பொறுப்புடன் பிரமேதாஸ அரசாங்கம் செயல்பட்டிருந்ததா?

இந்தியாவை ஈழத் தமிழர் அரசியலில் இருந்து அகற்ற வேண்டும் என்னும் நோக்கத்துடன்தான் பிரேமதாஸ விடயங்களை திட்டமிட்டு முன்னெடுத்தார். எனவே, ஐக்கிய தேசியக் கட்சி அன்று செய்த தவறுகளை சரிசெய்ய வேண்டிய பொறுப்பு ரணில் விக்கிரமசிங்கவுக்கு உண்டு. 13ஆவது திருத்தச் சட்டத்திலிருந்து எடுக்கப்பட்ட விடயங்கள் மீளவும் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட வேண்டும் - அப்போதுதான் அது முழுமையானதாக அமையும். இதேவேளை ஆளுநர்களின் அதிகாரத்துக்கு சட்டரீதியில் கடிவாளமிட வேண்டும். எல்லாவற்றுக்கும் முன்னால் மாகாண சபை தேர்தல் நடைபெற வேண்டும். அப்போதுதான் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் பொருளாதார ரீதியில் சுயாதீனமாக முன்னேறுவதற்கான பணிகள் தொடர்பில் சிந்திக்க முடியும். நாம் மீண்டும் கூறுகின்றோம் பந்து ரணிலின் பக்கத்தில் - தென்னிலங்கையின் பக்கத்தில்தான் இருக்கின்றது.

# ஜனாதிபதிக்கு எதிர்ப்பு; கைதானோருக்கு பிணை!

யாழ்ப்பாணம், ஜன. 06

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டமைக்காக கைது செய்யப்பட்ட நால்வர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

வடக்குக்கு நான்கு நாள் பயணமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்தார்.

அவரின் இந்த வருகையின் போது எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை சேர்ந்த நால்வர் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களிடம் வாக்கு மூலம் பெறப்பட்ட பின்னர் அவர்கள் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

## கற்கைநெறிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஜன. 06

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் சிறீலசிறீ ஆறுமுகநாவலர் பயிற்சி நிலையத்தால் தைப்பூசத் திருநாளான எதிர்வரும் 25ஆம் திகதி புதிய பிரிவு புராணபடனம், கதாப் பிரசங்கம், சமஸ்கிரு தம் வகுப்புகளுக்கான ஆரம்ப நிழ்வு நடைபெறவுள்ளது.

ஆறு மாதகாலங்கள் கொண்ட இந்தப் பயிற்சி வகுப்பு பிரதி சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறவுள்ளது. இதில், இணைய விரும்புவோர் "இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், வட பிராந்திய அலுவலகம், குருகுலம், பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்குத் தபாலிலோ அல்லது நேரிலோ எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் பணிப்பாளர் ய. அநிருத்தனன் தெரிவித்துள்ளார். (ஐ)

## கோண்டாவில் வாள்வெட்டில் இளைஞர் ஒருவர் படுகாயம்!

யாழ்ப்பாணம், ஜன. 06

கோண்டாவில் ஐயப்பன் ஆலயம் அருகே நடத்தப்பட்ட வாள்வெட்டு சம்பவத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த குழு இளைஞர்மீது வாள்வெட்டு தாக்குதலை நடத்தியதுடன், அவரின் ஓட்டோவையும் சேதப்படுத்தி விட்டு தப்பிச் சென்றது.

இதில் காயமடைந்தவரை அங்கிருந்தவர்கள் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்ப்பித்தனர்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ)

## விமான படை தளத்தை படம் பிடித்தவர் கைது!

வவுனியா, ஜன. 06

வவுனியா விமானப் படைத் தளத்தை படம் பிடித்தார் என்ற குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசேட விமானம் மூலம் நேற்றைய தினம் ஜனாதிபதி வவுனியா சென்றடைந்தார். இந்த நிலையில், அவரின் வருகைக்கு முன்பாக வவுனியா விமானப் படைத் தளத்தை இளைஞர் ஒருவர் படம் பிடித்திருந்தார்.

அங்கு காவல் பணியில் இருந்த படையினர் அவரை பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

கைதான இளைஞர் வவுனியா - பூனாவ பகுதியை சேர்ந்தவராவார். அவரிடம் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# எழுத்தாளர் முருகபூபதிக்கு மெல்பனில் நாளை கௌரவம்!

மெல்பன், ஜன. 06

அவுஸ்திரேலியாவில் வாழும் பிரபல எழுத்தாளரும் மூத்த பத்திரிகையாளருமான லெ. முருகபூபதி அவுஸ்திரேலிய தமிழ் இலக்கிய கலை சங்கத்தால் கௌரவிக்கப்படவுள்ளார்.


இந்தக் கௌரவிப்பு நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு அவுஸ்திரேலியாவின் - மெல்பன் நகரில் உள்ள மூத்த பிரஜைகள் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில், முருகபூபதியின் இலக்கிய சாதனைகள், சமூகநல செயல்பாடுகள் என்பவற்றைப் பற்றி அறிஞர்களும், இலக்கியவாதிகளும் சமூக செயல்பாட்டாளர்களும் உரையாற்றவுள்ளனர்.

ல. முருகபூபதி சிறுகதை, நாவல், கட்டுரை, பயண இலக்கியம், சிறுவர் இலக்கியம், கடித இலக்கியம், நேர்காணல் பதிவுகள், புனைவு சாராத ஆக்கங்கள் எனப் பல்துறைகளிலும் எழுதிவருவதுடன் 30இற்கும் மேற்பட்ட நூல்களையும் வெளியிட்டுள்ளார். 35 வருடங்களுக்கு முன்னர் வீரகேசரி நாளிதழின் செய்தியாளராகவும் அவர் பணியாற்றியிருந்தார்.

இலங்கை அரசாங்கம் இலக்கியத்துக்காக வழங்கும் சாகித்ய விருது உட்பட பல விருதுகளை அவர் வென்றிருந்தார். மேலும், அவர் கடந்த 35 ஆண்டுகளாக இலங்கையில் போரால் பெற்றோர்களை இழந்த மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக "இலங்கை மாணவர் கல்வி நிதியம்" என்ற அமைப்பை நிறுவி உதவிகளை வழங்கி வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'





## இன்றைய ராசிபலன்

ஜனவரி - 06 சனிக்கிழமை
சோபகிருது வருடம் - மார்கழி 21
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : தசமி

**மேடம்**
கணவன்-மனைவிக்குள் ஆரோக்கியமான விவாதங்கள் வந்து போகும். தாயாரின் உடல் நிலை சீராகும். கல்யாணப் பேச்சுவார்த்தை சாதகமாக முடியும். உத்தியோகத்தில் மேலதிகாரி ஆதரிப்பார்.

**இடபம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். பொது காரியங்களில் ஈடுபடுவீர்கள். காணாமல் போன ஆவணம் ஒன்று கிடைக்கும்.

**மிதுனம்**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். பிள்ளைகளால் மகிழ்ச்சி தங்கும். உங்களை சுற்றி இருப்பவர்களின் சுயரூபத்தை புரிந்துகொள்வீர்கள். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். கனவு நனவாகும்.

**கடகம்**
பணப் பற்றாக்குறையை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். தாய்வழி உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். புது வேலை கிடைக்கும். தொழிலில் லாபம் அதிகரிக்கும்.

**சிம்மம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். சொந்த பந்தங்களில் சிலர் கேட்ட உதவியை செய்வீர்கள். புது வாகனம் வாங்குவீர்கள்.

**கன்னி**
குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். பாதியில் நின்ற வேலைகள் முடியும். விலை உயர்ந்த பொருட்கள் வாங்குவீர்கள். நேர்மறை எண்ணம் பிறக்கும். நட்பு வட்டம் விரியும்.

**துலாம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் எந்த காரியத்தை தொட்டாலும் இரண்டு மூன்று முறை முயன்று முடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். மற்றவர்களிடம் வீண் கோபத்தை தவிர்க்கவும்.

**விருட்சிகம்**
குடும்பத்தில் சின்ன சின்ன வாக்குவாதங்கள் வந்து நீங்கும். சகோதர வகையில் அலைச்சல் உண்டு. திடீர் பயணங்கள் இருக்கும். வியாபாரத்தில் பழைய பாக்கிகள் வசூலாவதில் தாமதம் ஏற்படும்.

**தனுசு**
குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். கல்யாண முயற்சிகள் பலிதமாகும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களை கவரச் சலுகைகளை அறிவிப்பீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும்.

**மகரம்**
உங்கள் செயலில் வேகம் கூடும். உறவினர் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். நெடு நாட்களாக பார்க்க நினைத்த ஒருவர் உங்களை தேடி வருவார். பிரபலங்கள் உதவுவார்கள்.

**கும்பம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். பணப்புழக்கம் கணிசமாக உயரும். உத்தியோகத்தில் புதிய பொறுப்புகள் தேடிவரும். அதிரடி மாற்றம் உண்டாகும் நாள்.

**மீனம்**
பிள்ளைகளின் வருங்காலம் குறித்து யோசிப்பீர்கள். வியாபாரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் சில சூட்சுமங்களை கற்றுகொள்வீர்கள். பொறுமை தேவைப்படும் நாள்.

# தமிழ் எழுத்துகளால் உருவான 25 அடி உயர திருவள்ளுவர் சிலை!



சென்னை, ஜன. 06

இந்தியாவின் தமிழகத்தில் தமிழ் எழுத்துக்களால் உருவாக்கப்பட்ட 25 அடி உயர திருவள்ளுவர் சிலை நேற்று திறந்து வைக்கப்பட்டது.

இந்த திருவள்ளுவர் சிலை 3 தொன் எடையில் 25 அடி உயரத்திற்கு அமைக்கப்பட்டுள்ளது. விசேடமாக, இந்த சிலை முழுவதுமாக தமிழ் எழுத்துக்களால் அமைக்கப்பட்டு நெற்றியில் அறம் என்ற சொல் பொறிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் கோவை மாவட்டத்தின் பொள்ளாச்சி வீதியின் குறிச்சிக்குளம் பகுதியில் இந்த திருவள்ளுவர் சிலை அமைக்கப்பட்டுள்ளது. மாலை வேளைகளில் மின் விளக்குகளால் ஒளிரும் வகையில் இந்த சிலை அமைக்கப்பட்டுள்ளது.

சிலை முழுவதும் உருக்கு இரும்பினால் உருவாக்கப்பட்டுள்ளது. 52 கோடி இந்திய ரூபாய் செலவில் உருவாக்கப்படும் 'ஸ்மார்ட் சிற்றி' திட்டத்தின் கீழ் இந்த சிலை உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நடிகர் விஜய் மீது காலணி வீச்சு

சென்னை, ஜன. 06

நடிகர் விஜய் மீது காலணி வீசப்பட்டமைக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு சென்னை மாவட்ட விஜய் மக்கள் இயக்கம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது.

தே. மு. தி. க. நிறுவன தலைவரும் , நடிகருமான கப்டன் விஜயகாந்த் உடல் நலக்குறைவால் கடந்த டிசெம்பர் 28 ஆம் திகதி காலமானார். அன்றைய தினம் அவரின் உடலுக்கு அஞ்சலி செலுத்த நடிகர் விஜய் சென்றிருந்தார்.

அஞ்சலி செலுத்திவிட்டு தனது வாகனம் நோக்கி விஜய் சென்று கொண்டிருந்தபோது, அவரை நோக்கி காலணி வீசப்பட்டது. இது தொடர்பான காணொலி வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியள்ளது.

இந்த நிலையில் நடிகர் விஜய் மீது காலணி



வீசப்பட்டது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்ககோரி சென்னை மாவட்ட விஜய் மக்கள் இயக்கம் சார்பில் கோயம்பேடு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# செந்தில் பாலஜி அமைச்சராக நீடிப்பதற்கு தடை இல்லை!

## உச்சநீதிமன்றம் தீர்ப்பு

புதுடில்லி, ஜன. 06

தமிழக அமைச்சர் செந்தில் பாலாஜி, அமைச்சராக நீடிக்கத் தடையில்லை என்று உயர் நீதிமன்ற எடுத்த நடவடிக்கை சரியானது என்றும் மேல்முறையீட்டு மனுவை தள்ளுபடி செய்து உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நேற்றைய விசாரணையின்போது, உயர் நீதிமன்றம் சில அறிவுரைகளை அளித்த போதும், முதல்வர் அதனை ஏற்கவில்லை என்று என்று மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது.

அமைச்சராக செந்தில் பாலாஜி நீடிப்பது தொடர்பாக முதல்வரே முடிவு செய்ய வேண்டும் என்று உயர் நீதிமன்றம் கூறியிருந்ததையும் மனுதாரர் சுட்டிக்காட்டியிருந்தார்.

மேலும், அமைச்சரை பதவி நீக்கம் செய்ய ஆளுநருக்கு அதிகாரம் இல்லை என்றும், சென்னை உயர் நீதிமன்ற உத்தரவு சரியானதே என்றும், இதில் தலையிடத் தேவையில்லை எனவும் உச்சநீதிமன்றம் கூறியுள்ளது.

இதன் மூலம் துறை இல்லாத அமைச்சராக செந்தில் பாலாஜி நீடிப்பதில் இருந்த சிக்கல் விலகியிருக்கிறது என்று கூறப்படுகிறது.

சட்டவிரோத பணப்பரிமாற்ற தடை சட்ட வழக்கில் கடந்த ஆண்டு ஜூன் 14ஆம் திகதி அமைச்சர் செந்தில் பாலாஜியை அமுலாக்கத் துறை கைது செய்தது. அவருக்கு எதிராக, கடந்த ஓகஸ்ட் 12ஆம் திகதி சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் 3,000 பக்கம் கொண்ட குற்றப்பத்திரிகை, ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த நிலையில், அவர் துறை இல்லாத அமைச்சராக இருந்து வந்தார். அவரை அமைச்சர் பதவியிலிருந்து நீக்கி ஆளுநர் ஆர். என். ரவி உத்தரவு பிறப்பித்தார். இதனை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. வழக்கு விசாரணையின் இறுதியில், அமைச்சராக தொடர்வதற்கு தடையில்லை என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்து, ஆளுநர் பிறப்பித்த உத்தரவுக் கும் தடை விதித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வெள்ளப் பாதிப்பை தேசிய பேரிடராக அறிவிக்குமாறு சென்னையில் போராட்டம்!

சென்னை, ஜன. 06

மக்களவைத் தேர்தலில் வாக்குச்சீட்டு முறையை அமல் படுத்த வேண்டும். தமிழகத்தில் ஏற்பட்ட வெள்ள பாதிப்பை தேசிய பேரிடராக அறிவித்து நிவாரண நிதி வழங்க வேண் டும் ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி மாநிலம் அளவில் விடுதலை சிறுத்தைகள் கட்சி யினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சென்னை, வள்ளுவர் கோட் டம் அருகே நடைபெற்ற ஆர்ப் பாட்டத்துக்கு கட்சித் தலைவர் திருமாவளவன் தலைமை வகித்தார். கூட்டணிக்



கட்சித் தலைவர்கள் பங்கேற்று கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கம் எழுப்பினர். (ஐ)



# நாள் மீன்பிடி நடவடிக்கை கட்டைக்காட்டில் ஆரம்பம்!

வடமராட்சி, ஜன. 06

வடமராட்சி கிழக்கு - கட்டைக்காட்டில் நேற்று வெள்ளிக்கிழமை நாள் மீன்பிடி நடவடிக்கை ஆசிர்வாதத்துடன் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வருடத் திருப்பலியின் போது குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்ட அந்தப் பிரதேசத்தை சேர்ந்த செல்வராசா சுதர்சன் இந்த வருடத்துக்கான நாள் தொழிலை கட்டைக்காடு மக்கள் சார்பாக முதன்முதலாக ஆரம்பித்தார்.

அந்தப் பகுதியின் பங்குத் தந்தை அமல்ராஜ் அடிகளாரின் ஆசிர்வாதத்துடனும் ஊர்மக்களின் ஆதரவுடனும் நேற்று காலை 7.30 மணியளவில் அவரின் படகு கடலில் இறக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து ஏனைய மீனவர்களின் படகுகள் கடலில் இறக்கப்பட்டன. இந்த நிகழ்வில் அந்த ஊர் மக்கள் பங்கேற்றனர். (ஐ-02)

# வலி. வடக்கு உயர்பாதுகாப்பு வலயம் அறிவிப்பு வர்த்தமானியை நீக்குங்கள்

## ஜனாதிபதியிடம் சீ. வீ. கே. சிவஞானம் கோரிக்கை



யாழ்ப்பாணம், ஜன. 06

**வலி.வடக்கில் 6 ஆயிரத்து 371 ஏக்கர் காணியை உயர் பாதுகாப்பு வலயமாக வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட அறிவிப்பை நீக்கவேண்டும் என்று வடக்கு மாகாண சபை அவைத்தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.**

நேற்று முன்தினம் யாழ். மாவட்ட செயலகத்தில் ஜனாதிபதி தலைமையில் நடந்த யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் அபிவிருத்தி குழு கூட்டத்திலேயே தான் மேற்கண்ட கோரிக்கையை விடுத்ததாக சீ. வீ. கே. சிவ ஞானம் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

வலி. வடக்கில் 6 ஆயிரத்து 371 ஏக்கர் காணிகளை உயர் பாதுகாப்பு வலயமாக அறிவித்து வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டது. அதனை 2023ஆம் ஆண்டு நீக்க நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி கூறி இருந்தார். ஆனால் இதுவரையில் அந்த அறிவிப்பு மீள பெறப்படவில்லை.

இந்நிலையில் குறித்த 6 ஆயிரத்து 371 ஏக்கர் காணிகளில் சுமார் 3 ஆயிரம் ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டுள்ளது. எனவே, முதல் கட்டமாக விடுவிக்கப்பட்ட காணிகளின் அறிவிப்பையாவது மீள பெற வேண்டும் என கோரிக்கை விடுத்தேன்.

இதேவேளை, தற்போது உயர்பாதுகாப்பு வலயமாக காணப்படும் பிரதேசத்தினுள் உள்ள 14 இந்து ஆலயங்களுக்கும் மக்கள் சென்று வழிபாடு நடத்த அனுமதி வழங்க வேண்டும். பலாலியில் விவசாய நடவடிக்கைக்காக 289 ஏக்கர் காணியை விடுவிக்க இணக்கம் தெரிவிக்கப்பட்ட போதிலும் அவை விடுவிக்கப்படவில்லை. அவற்றையும் விடுவிக்க வேண்டும் என ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தேன்.

அதற்கு பதிலளித்த ஜனாதிபதி உடனடியாக இந்த விடயங்களை ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதாக கூறினார்- என்றும் சிவஞானம் கூறினார். (ஐ)

# உடன்பட்ட கோரிக்கைகளை இம்முறையாவது நிறைவேற்றுக

## ஜனாதிபதிக்கு ஆறு. திருமுருகன் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 06

நாம் விடுத்த கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உடன்பட்டு ஒரு வருடமாகிறது. எனவே,இந்த முறையாவது எமது கோரிக்கைகளை கருத்தில் கொள்ள வேண்டும் என்று கலாநிதி ஆறு. திருமுருகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த விடயம் குறித்து இந்து மாமன்றத்தின் சார்பில் அவர் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு,

இலங்கைத் தமிழர்களின் நீண்டகாலப் பிரச்னைக்கு விரைவில் நிரந்தர தீர்வு காணுதல், வடக்கு - கிழக்கில் இராணுவத்தின் பயன்பாட்டில் உள்ள பொதுமக்களின் நிலங்களை விரைவில் விடுவித்தல், கீரிமலை காங்கேசன்துறை வீதியில் ஜனாதிபதி மாளிகை அமைப்பதற்காக அப்பகுதியில் உள்ள சைவ ஆலயங்கள், மடங்கள் அழிக்கப்பட்டு



விட்டன. மீளவும். அவ்விடங்களில் பொதுமக்கள் சென்று தமது வழிபாட்டு இடங்களை உரிய முறையில் பயன்படுத்த அனுமதிக்குமாறு வேண்டப்பட்டது.

காங்கேசன்துறை - பருத்தித்துறை வீதியில் இருந்த சுக்கிர வார திருகோணச்சத்திரம் இடிக்கப்பட்டு அந்நிலம் தல்செவன இராணுவ ஹோட்டல் பயன்பாட்டில் இருந்து மீளவும் சைவ சமய மடம் அமைப்பதற்கு நிலத்தை கையளிக்க வேண்டும், கிளிநொச்சி - இயக்கச்சி பகுதியில் பொதுமக்களின் காணிகள் பல இராணுவ முகாம்களாக உள்ளன. அவை எதுவும் மீளவும் பொதுமக்களிடம் கையளிக்கப்படவில்லை - அவற்றை கையளியுங்கள்.

இந்தக் கோரிக்கைகளை சென்ற ஆண்டு தைப்பொங்கல் தினத்தில் தங்களை சந்தித்த போது தங்களிடம் விடுத்த கோரிக்கைகள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை. அப்போது முன்வைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக தாங்கள் உடன் கருத்தில் கொண்டு நடவடிக்கை எடுப்பதாக கூறி ஒரு வருடம் பூர்த்தியாகிறது. ஆனால் அவற்றில் எவையும் நிறைவேற்றப்படவில்லை.

இந்த முறையாவது அவற்றை கருத்தில் கொண்டு மனிதாபிமான ரீதியில் பிரச்னைகளைத் தீர்க்க முன்வாருங்கள். தாங்கள் பதவியேற்றவுடன் விரைவில் தமிழினத்தின் பிரச்னையை தீர்ப்பதாக பகிரங்கமாக அறிவித்திருந்த நிலையில் இந்தப் பிரச்னையை தீர்ப்பதில் எவ்வித முயற்சியும் நடைபெறுவதாகத் தெரியவில்லை. நாம் தொடர்ந்து ஏமாற்றப்படுகிறோம்" - என்று குறிப்பிட்டுள்ளார். (ஐ)



# போரில் கால் இழந்தோருக்கு செயற்கை கால் வழங்கல்

யாழ்ப்பாணம், ஜன. 06

போரில் தமது காலை இழந்து அங்கவீனமானவர்களுக்கு செயற்கை கால் வழங்கப்பட்டது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அமைச்சர் பந்துல குணவர்த்தன, வடக்கு மாகாண ஆளுநர் பி. எஸ். எம். சார்ள்ஸ், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அ. சிவபாலசுந்தரன் ஆகியோர் பங்கேற்றனர். (ஐ)

# கிணற்றில் தவறி விழுந்து பெண் பலி!

யாழ்ப்பாணம், ஜன. 06

தண்ணீர் அள்ள முயன்ற 96 வயதான மூதாட்டி தவறி கிணற்றுக்குள் விழுந்து உயிரிழந்தார்.

அராலி மேற்கு வட்டுக் கோட்டை பகுதியை சேர்ந்த ஆறுமுகம் தங்கம்மா (வயது 96) எனும் மூதாட்டியே உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது. (ஐ)

# குருநகர் மீனவர் திடீர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜன. 06

கடற்தொழிலுக்கு சென்ற குருநகர் மீனவர் திடீர் சுகவீனமுற்றதால் கரைக்கு அழைத்து வரப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார். குருநகரை சேர்ந்த அன்ரனி ஜூட் (வயது 42) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் வியாழக்கிழமை அதிகாலை மூவருடன் கடலில் மீன்பிடிப்பதற்காக சென்றுள்ளார். அவர் திடீரென சுகயீனமுற்ற நிலையில் சக மீனவர்களால் கரைக்கு கொண்டுவரப்பட்டார்.

யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். (ஐ)

# நுளம்பு பெருகும் சூழல்; 8 பேருக்கு எதிராக வழக்கு

யாழ்ப்பாணம், ஜன. 06

கொட்டடி பிரதேசத்தில் டெங்கு நோய் பரவும் விதமாக சுற்றுச்சூழலை வைத்திருந்த 8 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அத்துடன், 12 பேருக்கு சிவப்பு எச்சரிக்கை அறிவித்தலும் விடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் நகர பொது சுகாதார பரிசோதகர் பிரிவுக்கு உட்பட்ட கொட்டடி பிரதேசத்தில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டிருந்தனர். இதையடுத்து நேற்று வெள்ளிக்கிழமை யாழ். நகர பொது சுகாதார பரிசோதகர் பா. சஞ்சீவன் தலைமையில் கிராம சேவை உத்தியோகத்தர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் இணைந்து அந்தப் பிரதேசத்தில் வீடு தரிசிப்பை முன்னெடுத்தனர்.

இதன்போது 80 ற்கும் மேற்பட்ட வீடுகள் தரிசிப்பு செய்யப்பட்டது. அந்தச் சமயம், டெங்கு நுளம்பு பெருகுவதற்கு ஏதுவாக தமது காணியை வைத்திருந்த 12 பேருக்கு சிவப்பு எச்சரிக்கை அறிவித்தல் வழங்கப்பட்டது. அத்துடன் வீட்டு வளவுகளில் டெங்கு நுளம்பு குடம்பிகள் காணப்பட்ட 8 பேருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. (ஐ)

### யாழ்ப்பாணம் உட்பட 9 மாவட்டங்களில்

# சின்னமுத்து நோய் தடுப்பூசி ஏற்றும் பணி இன்று ஆரம்பம்!

கொழும்பு, ஜன. 06

**சின்னமுத்து நோய்க்கான தடுப்பூசி ஏற்றும் பணி இன்று சனிக்கிழமை யாழ்ப்பாணம் உட்பட 9 மாவட்டங்களில் ஆரம்பமாகிறது என்று சுகாதார மேம்பாட்டு பணியகம் தெரிவித்துள்ளது.**

காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை அருகிலுள்ள தடுப்பூசி மையங்களுக்குச் சென்று 6 முதல் 9 மாதங்களுக்கு இடையிலான குழந்தைகளுக்கு இந்த தடுப்பூசியை செலுத்துமாறு பெற்றோருக்கு சுகாதார மேம்பாட்டு பணியகம் அறிவுறுத்தியுள்ளது.

குழந்தைகள் மத்தியில் சின்னமுத்து எனப்படும் தட்டம்மை நோய் அதிகளவில் பரவி வருகிறது. சின்னமுத்து நோயாளர்கள் அதிகம் பதிவாகியுள்ள யாழ்ப்பாணம், கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி, மாத்தறை, கண்டி, குருணாகல் மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களில் தடுப்பூசி ஏற்றும் திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

தொற்று நோய்க்கு எதிராக நோய் எதிர்ப்பு சக்தியை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு இந்த திட்டம் செயல்படுத்தப்படவுள்ளதாக சுகாதார மேம்பாட்டு பணியகம் தெரிவித்துள்ளது. (ஐ)



# மின்சார சபை ஊழியர் சங்கங்களின் போராட்டம் நேற்றும் தொடர்ந்தது!

கொழும்பு, ஜன. 06

இலங்கை மின்சார சபைக்கு சொந்தமான மின் உற்பத்தி நிலையங்களை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்பனை செய்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மின்சார சபையின் அனைத்து தொழிற்சங்கங்களின் ஏற்பாட்டில் மூன்றாவது நாளாக நேற்று வெள்ளிக்கிழமையும் போராட்டம் நடைபெற்றது.

இந்தப் போராட்டம் கொழும்பு - கோட்டையில் உள்ள இலங்கை மின்சார சபை தலைமையகத்துக்கு முன்பாக நடைபெற்றது.

நாடு முழுவதிலும் உள்ள இலங்கை மின்சார சபை ஊழியர்கள் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

இதேவேளை, ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதி மாளிகை, நிதி அமைச்சின் வளாகம், மத்திய வங்கி மற்றும் காலிமுகத்திடல் ஊடாக பிரவேசிப்பதற்கும் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தையில் இடையூறு ஏற்படுத்தவும் இலங்கை மின்சார சபையின் தொழிற்சங்கத் தலைவர் ரஞ்சன் ஜயலால் உள்ளிட்டோருக்கு தடை விதித்து கோட்டை நீதிவான் நீதிமன்றம் நேற்று வெள்ளிக்கிழமை உத்தரவு பிறப்பித்தது. (ஐ)

# சமூக ஊடகங்களை பயன்படுத்த மின்சார சபையினருக்கு தடை!

கொழும்பு, ஜன. 06

இலங்கை மின்சார சபையின் ஊழியர்கள் சமூக ஊடகங்களை பயன்படுத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

சபையின் பொது முகாமையாளரின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் ஊடாக இந்த தடை விதிக்கப்பட்டுள்ளது.

மின்சார சபையின் எந்தப் பணியாளரும் எந்தக் காரணத்துக்காகவும் தனது அதிகார பூர்வ அடையாளத்தையும் தகவலையும் சமூக ஊடகங்களுக்குப் பயன்படுத்த முடியாது.

மின்சார சபையின் இரகசிய தகவல்களை வெளியிடுவது, தவறான அல்லது அரசியல் அவதூறு விஷயங்களை சமூக ஊடகங்களில் வெளியிடுவது ஆகியவை ஒழுங்கு விதிகளின் படி கடுமையான குற்றமாகும் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

இந்த சூழற்சிக்கு முரணாக செயற்படுபவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# பூஸா சிறையில் அதிகாரிமீது இந்திய பிரஜை தாக்குதல்!

கொழும்பு, ஜன. 06

பூஸா சிறைச்சாலையின் சிறப்புப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்தியப் பிரஜை ஒருவர், சிறைச்சாலை வைத்தியசாலையின் அதிகாரி ஒருவரைத் தாக்கியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

புதன்கிழமை இரவு மருந்துகளை வழங்கிக் கொண்டிருந்த அதிகாரியையே சந்தேக நபர் தாக்கினார் என்று சிறைச்சாலை ஆணையாளர் காமினி பி. திஸநாயக்க தெரிவித்தார்.

தாக்குதலில் அதிகாரி தரையில் விழுந்த நிலையில் கராப்பிட்டி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக முதற்கட்ட விசாரணை நடத்தப்பட்டு வருவதாகவும் சந்தேகநபருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் திஸநாயக்க தெரிவித்தார்.

# 50 இலட்சம் வரி செலுத்துவோரை அடையாளம் காண நடவடிக்கை!

கொழும்பு, ஜன. 06

உள்நாட்டு இறைவரி திணைக்களம் 2023ஆம் ஆண்டின் இறுதிக்குள் 10 இலட்சத்துக்கும் அதிகமான வரி பதிவுகளை தன்னார்வ மற்றும் பிற பதிவுகள் மூலம் கண்டுள்ளது. நாட்டில் 50 இலட்சம் உயர் வருமானம் ஈட்டுபவர்களை அடையாளம் காண உள்நாட்டு இறைவரி திணைக்களம் முற்படுவதாக திணைக்களத்தின் சிரேஷ்ட ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

2023 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் 4 இலட்சத்து 37 ஆயிரத்து 547 ஆக இருந்த வரி பதிவுகளின் எண்ணிக்கை இந்த ஆண்டின் இறுதிக்குள் 10 இலட்சத்தை தாண்டியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டில் 20 வீதத்துக்கும் அதிகமானவர்கள் அதிக வருமானம் ஈட்டுபவர்களாக உள்ளனர். நாட்டின் மொத்த மக்கள் தொகை ஈட்டும் வருமானத்தில் 60 வீதத்துக்கும் அதிகமான வருமானத்தை இவர்கள் ஈட்டுகின்றனர். அதனால் "எங்கள் முதல் பணி அதிக வருமானம் ஈட்டும் 50 இலட்சம் பேரை அடையாளம் காண்பதாகும்," என்றார்.

இந்த 50 இலட்சம் பேர் தொழில்முனைவோர் மற்றும் தொழில் வல்லுநர்கள் என 14 வகைகளில் பிரிக்கப்பட்டுள்ளனர். 18 வயதுக்கு மேற்பட்ட அனைத்து குடிமக்களும் பெப்ரவரி 1ஆம் திகதிக்கு முன்னர் வரி பதிவு இலக்கத்தை பெற சலுகை காலம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், மோட்டார் போக்குவரத்து திணைக்களம், ஆட்கள் பதிவுத் திணைக்களம் மற்றும் நிறுவனப் பதிவாளர் ஆகிய திணைக்களங்கள் இறைவரி நிர்வாக முகாமைத்துவத் தகவல் அமைப்புடன் இணைந்துள்ளன. சுங்கத் திணைக்களமும் 100 வீதம் இறைவரி திணைக்களத்துடன் இணைக்கப்பட்டுள்ளதாகவும் கீர்த்தி நாபான கூறினார்.

தனியார் வங்கிகளுடன் இறைவரி நிர்வாக கட்டமைப்பை இணைப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும், ஆனால் தனியார் துறைக்கு செல்வதற்கு முன் அனைத்து அரசு நிறுவனங்களையும் முதல் கட்டமாக கணினியுடன் இணைக்க இறைவரி திணைக்களம் திட்டமிட்டுள்ளதாகவும் - அவர் கூறினார். (ஐ)

# தேசிய மக்கள் சக்தியினரால் நாட்டை நிர்வகிக்க முடியாது!

### ஹர்ஷ டி சில்வா எம். பி. சொல்கிறார்

கொழும்பு, ஜன. 06

தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களுக்கு நாட்டை எவ்வாறு ஆட்சி செய்வது என்பது தெரியாது என்று பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

"தேசிய மக்கள் சக்தி அரசாங்கமொன்றை அமைத்தால் அவர்கள் சர்வதேச இறையாண்மை பத்திர கடனை செலுத்தமாட்டார்கள்.

தேசிய மக்கள் சக்தியின் பொருளாதார வல்லுநர்களின் அறிக்கைகள் மற்றும் கருத்துகளின் பிரகாரம் கடனை பராமரித்து செல்லும் அறிவு அவர்களுக்கு இல்லை என்பதையே காட்டுகிறது.

இந்த கருத்தை தேசிய மக்கள் சக்தியின் தலைமை பொருளாதார ஆலோசகர் பேராசிரியர் அனில் ஜெயந்த தெரிவித்திருந்தார். இதனையே மீண்டும்



கட்சியின் உயர்மட்ட பொருளாதார நிபுணர் சுனில் ஹந்துன்நெத்தியும் தெளிவாக கூறியுள்ளார்.

இவர்களின் கருத்துகள் மூலம் தேசிய கடன்களை கையாளும் திறன் இல்லை என்பது புலப்படுகிறது. அவர்களது தலைமையின் கீழ் மோசமான நிலைக்கே நாடு செல்லும்." - என்று தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார். (ஐ)

# ஐக்கிய மக்கள் சக்தியில் விரைவில் மாற்றங்கள்!

### ஜயசேகரவும் இணைவார் என்கிறார் ரஞ்சித்

கொழும்பு, ஜன. 06

ஐக்கிய மக்கள் சக்தியில் விரைவில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

அத்துடன், மேலும் பலர் கட்சியுடன் கைகோர்க்கவுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். அத்துடன், பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர விரைவில் தம்முடன் இணையவுள்ளார் என்றும் அவர் கூறினார்.

இதனிடையே, எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவார் எனவும் கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார். (ஐ)



# நிகழ்நிலை பாதுகாப்பு சட்டம் நிச்சயம் நிறைவேற்றப்படும்!

## பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர்



**கொழும்பு, ஜன. 06**

**எமது நாட்டின் பெண்கள், சிறுவர்களை பாதுகாக்க வேண்டும். நாட்டின் பிள்ளைகளை பாதுகாக்கவே நாம் செயல்படுகின்றோம். கடந்த வருடம் 3 ஆயிரம் முறைப்பாடுகள் சமூக ஊடகங்கள் தொடர்பில் கிடைக்கப்பெற்றன. இதன்காரணமாகவே நிகழ்நிலை காப்பு சட்டமூலத்தை கொண்டு வருகிறோம். எந்த எதிர்ப்பு வந்தாலும் நான் இதனை நிறுத்தமாட்டேன். நிச்சயம் நடைமுறைப்படுத்துவேன் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.**

மேலும், கடந்த வருடம் பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறை சம்பவங்கள் தொடர்பில் 8 ஆயிரம் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அந்த 8 ஆயிரம் முறைப்பாடுகளில் மூவாயிரம் முறைப்பாடுகள் சமூக ஊடகங்கள் தொடர்பில் முன்வைக்கப்பட்டவை. இதன் காரணமாகவே நிகழ்நிலை காப்பு சட்ட மூலத்தைக் கொண்டு வருகிறோம்.

சர்வதேச அமைப்புகள் மற்றும் தூதரகங்களில் உள்ளவர்கள் தொடர்ச்சியாக என்னைத் தொடர்பு கொண்டு இதற்கு எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். இன்று காலையும் (நேற்றுமுன்தினம்) தூதுவர் ஒருவர் தொடர்பு கொண்டார். ஏதோ ஒரு வகையில் இதனை நிறுத்துமாறு கூறினார். நான் அவருக்கு தெளிவுபடுத்தினேன். நான் இதனை நிறுத்த மாட்டேன். எதிர்வரும் 23ஆம் திகதி இதனை கொண்டு வருவேன். இது தொடர்பில் யோசனைகளை 8ஆம் திகதி முன்னர் தெரிவிக்க முடியும். அவர்களின் கருத்துகளை இதில் உள்வாங்க முடியுமா என ஆராய்வோம் - முடிந்தவற்றை செய்வோம். நாட்டின் பெண்கள் மற்றும் சிறுவர்களை பாதுகாக்கவே இவை அனைத்தையும் செய்கிறோம் - என்றார். (ஐ)

# 20 ரயில் எஞ்ஜின்களை வழங்குகிறது இந்தியா!

கொழும்பு, ஜன. 06

இலங்கைக்கு 20 ரயில் எஞ்ஜின்களை அன்பளிப்பாக வழங்குவதற்கு இந்திய அரசாங்கம் முன்வந்துள்ளது.

பயன்பாட்டிலிருந்து நீக்கப்பட்ட 20 டீசல் எஞ்ஜின்களை இலங்கைக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ரயில்வே பொது முகாமையாளர் எச். எம். கே. டபிள்யூ. பண்டார தெரிவித்துள்ளார்.

இந்த ரயில் எஞ்ஜின்களை நாட்டின் ரயில் பாதைகளில் இயக்க முடியுமா என சமீபத்தில் இந்தியா வந்த ரயில்வே துறை நிபுணர்கள் குழு ஆய்வு செய்திருந்தது.

இதனையடுத்தே முதல் கட்டமாக எதிர்வரும் பெப்ரவரி மாதம் இரண்டு எஞ்ஜின்களை நாட்டுக்குக் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# முன்னாள் டி. ஐ. ஜிக்கு நீதிமன்றம் பிடியாணை

கொழும்பு, ஜன. 06

நீதிமன்றில் முற்படுமாறு அழைப்பாணை அனுப்பியும் நீதிமன்றில் முன்னிலையாகாத ஓய்வுபெற்ற சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் ரவி வித்யலங்காரவை உடனடியாக கைது செய்து முற்படுத்துமாறு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அமல் ரணராஜா பிடியாணை பிறப்பித்துள்ளார்.

நிதிக்குற்றம் தொடர்பாக பிரதிவாதிக்கு எதிராக குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கில் சாட்சியமளிக்க நீதிமன்றில் முற்படுமாறு அழைப்பாணை அனுப்பியிருந்தும் முன்னிலை ஆகாததையடுத்தே ஓய்வு பெற்ற சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. (ஐ)

# போதை கடத்தல்காரன் மீதான விசாரணை திருப்தி தரவில்லை!

## பதில் பொலிஸ் மா அதிபர்



கொழும்பு, ஜன. 06

குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் தடுப்பில் வைக்கப்பட்டுள்ள பெரும் போதைப் பொருள் கடத்தல்காரரான ஹரக்கட்டா மீதான விசாரணையில் தாம் திருப்தியடையவில்லை என்று பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

ஹரக்கட்டா தொடர்பான விசாரணைகளின் முன்னேற்றம் குறித்து கேட்டறிவதற்காக பதில் பொலிஸ் மா அதிபர் நேற்றுமுன்தினம் குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு சென்றிருந்த நிலையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாட்டின் பிரதான போதைப் பொருள் கடத்தல்காரர்களில் ஒருவரான ஹரக்கட்டா நீண்ட காலமாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த போதிலும் அவருக்கு எதிரான விசாரணைகள் மிகவும் மந்தகதியில் இடம்பெறுவதாகவும் அவர் கூறினார்.

இதனடிப்படையில், விசாரணை அதிகாரிகளின் பெரும் பிழைகளை சுட்டிக் காட்டிய பதில் பொலிஸ் மா அதிபர், ஹரக்கட்டாவுக்கு எதிரான விசாரணைகளுக்காக 3 மேலதிக பொலிஸ் குழுக்களை நியமித்துள்ளார். (ஐ)

# ஹூதி கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக கப்பலை அனுப்புவது குறித்து ஆராய்வு

கொழும்பு, ஜன. 06

செங்கடலில் ஹூதி கிளர்ச்சியாளர்களுக்கு எதிரான அமெரிக்கா முன்னெடுத்துள்ள நடவடிக்கைகளில் இலங்கை கடற்படையினரை இணைப்பது தொடர்பில் ஆராயப்படுகின்றது. இந்த நிலையில் செங்கடலுக்கு கப்பலை அனுப்புவது தொடர்பில் கடற்படை அவதானம் செலுத்தி வருகின்றது.

ஏவுகணை தாக்குதல்கள் தொடர்ச்சியாக இடம்பெறும் பகுதிக்கு இலங்கை கடற்படையின் கப்பல்களை அனுப்புவதற்கு முன்னர் அது குறித்து தீவிரமாக ஆராயவேண்டும் என்று கடற்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அமெரிக்காவின் நடவடிக்கைகளில் இலங்கையும் இணைந்து கொள்ளக்கூடும் என மூன்றாம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார். கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் அவர் இதனை குறிப்பிட்டிருந்தார்.

செங்கடலில் ஹூதி கிளர்ச்சியாளர்கள் கப்பல்கள் மீது மேற்கொள்ளும் தாக்குதல்களுக்கு எதிரான சர்வதேச படையணியில் இணைந்துகொள்ளுமாறு அமெரிக்கா விடுத்த வேண்டுகோள்களை பல உலக நாடுகள் நிராகரித்துள்ளன.

காஸாவில் இஸ்ரேல் மேற்கொண்டுள்ள தாக்குதல்களை தொடர்ந்து ஹூதி கிளர்ச்சியாளர்கள் செங்கடல் பகுதியில் இஸ்ரேலின் கப்பல்கள் உட்பட கப்பல்களை தாக்கி வருகின்றனர்.

ஹூதி கிளர்ச்சியாளர்களுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு கப்பல்களை வழங்குமாறு இலங்கை உட்பட 20 நாடுகளை அமெரிக்கா கேட்டுள்ளது.

செங்கடலுக்கு இலங்கை கடற்படை கப்பலை அனுப்பினால் அதற்காக பெருந்தொகையை செலவிட வேண்டியிருக்கும் என தெரிவித்துள்ள தொடர்புபட்ட வட்டாரங்கள் இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலைமையையும் கருத்தில்கொள்ளவேண்டும் எனவும் தெரிவித்தன. (ஐ)

# பொருளாதாரம் ஸ்திரப்படும்வரை மக்கள் பொறுமை காக்கவேண்டும்

## அகிலவிராஜ் காரியவசம்



கொழும்பு, ஜன. 06

வற் வரி அதிகரிப்பு குறுகிய காலத்துக்கே. மக்களுக்கு விரைவாக நிவாரணம் வழங்குவதாக ஜனாதிபதி உறுதியளித்திருக்கிறார். அதனால் வீழ்ச்சியடைந்திருக்கும் பொருளாதாரத்தை ஸ்திரநிலைக்கு கொண்டுவர சிறிது காலத்துக்கு அனைத்து மக்களும் சற்று பொறுமையாக இருக்க வேண்டும் என ஐக்கிய தேசிய கட்சியின் உப தலைவர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரவித்தார்.

மேலும், வற் வரி அதிகரிப்பால் பொருளாதார ரீதியில் மக்களுக்கு பெரும் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. என்றாலும் இந்த வற் வரி அதிகரிப்பு குறுகிய காலத்துக்காகும். மக்களுக்கு விரைவாக நிவாரணம் வழங்குவதாக ஜனாதிபதி உறுதியளித்திருக்கிறார். அதேநேரம் அத்தியாவசிய பொருட்களுக்கு இந்த வற்வரி அதிகரிக்கப்படவில்லை.

குறிப்பாக கல்வி, சுகாதார துறை சார்ந்த பொருட்களுக்கு இந்த வரி அதிகரிக்கப்படவில்லை. அத்துடன் 15வீதமாக இருந்ததை தற்போது 18 வீதமாக அதிகரித்திருக்கிறோம். ஏற்கனவே வரி விலக்களிக்கப்பட்டிருந்த ஒரு சில பொருட்களுக்கே தற்போது 18வீத வரி அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

மேலும் பல வருடங்களுக்கு பின்னர் அரசாங்கத்தின் அனைத்து கொடுப்பனவுகளும் கடந்த டிசெம்பர் 31ஆம் திகதிக்குள் கொடுத்த முடிப்பதற்கு திறை சேரிக்க இம்முறை முடியுமாகி இருந்துள்ளது. பணம் அச்சிடாமலே இதனை செய்ய முடியுமாகி இருக்கிறது. ஜனாதிபதியின் சிறந்த நிதி முகாமைத்துவமே இதற்கு காரணமாகும். கடந்த காலங்களில் பணம் அச்சிட்டே மக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டு வந்தது. அதனால் நாட்டின் பணவீக்கம் அதிகரித்தது.

ஆனால் ஜனாதிபதி சரியான முறையில் நடவடிக்கைகளை முன்னெடுக்கும்போது மக்களுக்கு கஷ்டம் ஏற்படும். என்றாலும் குறுகிய காலத்துக்கு இதனை பொறுத்துக்கொண்டால் எதிர்காலம் சுபீட்சமாக அமையும். அதற்காகவே வற்வரி அதிகரிக்கப்பட்டிருக்கிறது. பெப்ரவரி மாதமாகும்போது மின் கட்டணத்தை குறைக்க இருக்கிறது. அதேநேரம் பொருட்களின் விலையும் குறைவடையும்.

அத்துடன், வீழ்ச்சியடைந்திருக்கும் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேறு மாற்று வழி இல்லாததாலே ஜனாதிபதி இந்த வழியில் செல்கிறார். வேறு மாற்று வழி இருந்தால் இதனை விமர்சிப்பவர்கள் அதனை தெரிவிக்க வேண்டும்.அதனால் மக்கள் இவர்களின் பொய் பிரசாரங்களை ஏற்றுக்கொண்டு செயல்பட்டால் நாடு அழிவின்பால் சென்றுவிடும்.

அவ்வாறான நிலை ஏற்பட்டால் அதற்கான பொறுப்பை நாங்கள் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. அதனால் வீழ்ச்சியடைந்திருக்கும் பொருளாதாரத்தை ஸ்திரநிலைக்கு கொண்டுவர ஜனாதிபதி பாரிய முயற்சிகளை மேற்கொண்டுவருகிறார். எனவே இதன் போது ஏற்படுகின்ற கஷ்டங்களை குறுகிய காலத்துக்கு அனைத்து மக்களும் பொறுத்துக்கொள்ள வேண்டும் - என்றார். (ஐ)



## அனர்த்தத்தால் வீடு சேதமடைந்த இருவருக்கு காசோலை வழங்கல்!

காரைதீவு, ஜன. 06

கடும் காற்று மற்றும் மழை காரணமாக காரைதீவு - 08, மாவடிப்பள்ளி - மேற்கு ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வீடுகள் சேதமடைந்தவர்களுக்கான கொடுப்பனவு வழங்கப்பட்டது.

இதற்கான காசோலைகள் காரைதீவு பிரதேச செயலாளர் எஸ். ஜெகராஜனால் வழங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் சமூக சேவைகள் பிரிவு உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். (ஐ)

## திருகோணமலை - கொழும்பு ரயில் சேவை நாளை ஆரம்பம்!

கொழும்பு, ஜன. 06

திருகோணமலை - கொழும்பு இடையிலான குளிரூட்டப்பட்ட ரயில் சேவை நாளை ஞாயிற்றுக்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளதாக திருகோணமலை பிரதான புகையிரத நிலைய அதிபர் தி. சர்வேஸ்வரன் தெரிவித்தார்.

கொழும்பு புறக்கோட்டையிலிருந்து அதிகாலை 5.45 மணிக்கு பயணிக்கும் இந்த ரயில் திருகோணமலையை முற்பகல் 11.45 மணிக்கு வந்தடையும்.

மீண்டும் மதியம் 12.35 மணிக்கு திருகோணமலையிலிருந்து பயணிக்கும் இந்த ரயில் பிற்பகல் 6.35 மணிக்கு கொழும்பு புறக்கோட்டையை சென்றடையும் என்றும் கூறினார். (ஐ)

# 10 புனிதர்களின் திருப்பண்டங்கள் திருமலை தேவாலயத்தில் மீட்பு!

**திருகோணமலை, ஜன. 06**

**பத்து புனிதர்களின் உடற்பாகங்கள் உள்ள திருப்பண்டங்களை உள்ளடக்கிய புராதன பேழை ஒன்று திருகோணமலை புனித குவாடலூப்பே அன்னை ஆலயத்தில் புதன்கிழமை கண்டுபிடிக்கப்பட்டது. இவ்வாறு ஒரே தடவை யில் பத்து புனிதர்களின் உடற்பாகங்கள் கண்டெடுக்கப்பட்டமை ஆசியாவிலேயே முதல் முறையாகும்.**



ரோமன் கத்தோலிக்க திருச்சபையின் திருகோணமலை மறை மாவட்டத்தின் சின்னக்கடை பங்கு என அழைக்கப்படும் புனித குவாடலூப்பே அன்னை ஆலயத்தின் பங்கு குருமனையில் இருந்த இரும்பு பாதுகாப்பு பெட்டகத்தில் இருந்தே இப்புனித பண்டங்கள் கண்டு பிடிக்கப்பட்டன என்று என பங்கு குருவானவர் அருட்பணி எஸ். ஆர். ஜெயரட்ணம் கூறினார்.

கண்டெடுக்கப்பட்ட திருப்பண்டங்கள் ஓர் ஆலயத்தில், ஒரே இடத்தில் கண்டறிப்பட்டுள்ளமை இலங்கையிலும் ஆசியா முழுவதிலும் இதுவே முதல் தடவை என அறியமுடிகின்றது.

ஒன்று அல்லது இரண்டு திருப்பண்டங்கள் மட்டுமே ஆலயங்களில் இருப்பது சாதாரண நடைமுறை. ஆனால், இவ்வாறு பத்து புனித பண்டங்கள் ஓர் ஆலயத்தில் இருப்பது தாம் அறிந்தவரையில் இதுவே முதல் முறை எனவும் பங்கு குருவானவர் கூறினார்.

கத்தோலிக்க திருச்சபையின் தலைமையகமான ரோமின் வத்திகானிலிருந்து இந்த திருப்பண்டங்கள் எந்த ஆண்டில் திருகோணமலைக்கு கொண்டு வரப்பட்டது என்பது குறித்த வரலாற்று பதிவுகள் எதுவும் ஆலயத்தில் இல்லை என்று அறிய முடிகின்றது.

மெக்சிக்கோ நாட்டின் குவாடலூப்பே என்ற கிராமத்தில் புனித மரியாள் காட்சி அளித்தமையை அடுத்து புனித குவாடலூப்பே அன்னை ஆலயம் அங்கு அமைக்கப்பட்டது.

போர்த்துகீசர் இலங்கையை ஆட்சி செய்த காலத்தில் அவர்களால், இலங்கையில் முதற்தடவையாக திருகோணமலை குவாடலூப்பே அன்னை ஆலயம் அமைக்கப்பட்டது. இந்த புனித பண்டங்களை தற்போது பெருந்தொகையான கத்தோலிக்கர்களும் ஏனையோரும் தரிசித்து வருகின்றனர். (ஐ)

# மட்டு. நகரம், கல்லடியில் விற்பனையான பாவனைக்குதவாத பொருட்கள் அழிப்பு!

மட்டக்களப்பு, ஜன. 06

மட்டக்களப்பு நகர் மற்றும் கல்லடி பிரதேசங்களில் விற்பனை செய்யப்பட்ட மனித பாவனைக்கு உதவாத பழங்கள், உணவுப் பொருட்கள் கைப்பற்றி அழிக்கப்பட்டன.

நேற்று முன்தினம் பொது சுகாதார பரிசோதகர்கள் நடத்திய திடீர் சோதனை நடவடிக்கையிலேயே இந்தப் பொருட்கள் அழிக்கப்பட்டன.

மனித பாவமனைக்கு உதவாத வாழைப்பழம், தோடம் பழம், கரட், இனிப்பு பண்டமான பூந்தி ஆகியவற்றை விற்பனை செய்த 7 வியாபாரிகளின் பொருட்கள் இவ்வாறு கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிம



னைக்கு பொது மக்களிடமிருந்து கிடைத்த முறைப்பாடுகளை அடுத்து பணிப்பாளர் மருத்துவர் ஜீ.சுகுணன் தலைமையிலான பொது சுகாதார பரிசோதகர்கள் இந்த திடீர் சுற்றி வளைப்பு நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இதேவேளை கல்லடி பொதுச் சந்தைத் தொகுதி, கல்லடி, திருகோணமலை வீதி ஆகியவற்றிலும் பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. (ஐ)

# கன்னியாஸ்திரிகள் மடத்தில் திருடிய சந்தேக நபர் கைது!

மட்டக்களப்பு, ஜன. 06

புளியந்தீவு சென். ஜோசப் கன்னியாஸ்திரிகள் மடத்தில் பொருட்கள் திருடப்பட்டுள்ளன. இந்தத் திருட்டு தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கன்னியாஸ்திரிகள் மடத்தில் உள்ள நான்கு விடுதிகளில் இருந்து நான்கு கைபேசிகள் ஏ.ரி.எம் அட்டை, அமெரிக்க டொலர், மற்றும் இந்திய - இலங்கை ரூபாய்கள் எனப் பெறுமதி வாய்ந்த பல பொருட்கள் திருடப்பட்டுள்ளன என்று மட்டக்களப்பு தலைமையாக பொலிஸ் நிலையத்தின் பதில் பொறுப்பதிகாரி எஸ். ரவிச்சந்திரன் தெரிவித்தார்.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக கன்னங்குடாவைச் சேர்ந்த 43 வயதுடைய நபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபரிடமிருந்து ஒரு ஐபோன் உட்பட 4 கை பேசிகள், 20,500 இலங்கை ரூபாய், 50 அமெரிக்க டொலர் , 200 இந்திய ரூபாய்கள் கைப்பற்றப்பட்டன. அத்துடன், ஏ.ரி.எம் அட்டையை பயன்படுத்தி எடுக்கப்பட்ட 9 ஆயிரத்து 500 ரூபாய் பணமும் கைப்பற்றப்பட்டது.

கன்னியாஸ்திரிகள் மடத்தில் கூலி வேலை செய்த நபரே இரவு வேளை புகுந்து இந்தத் திருட்டை செய்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# டெங்கு பரவலை கட்டுப்படுத்த சிரமதான பணிகள் ஆரம்பம்!

அக்கரைப்பற்று, ஜன. 06

ஆலையடிவேம்பு பிரதேச செயலர் பிரிவில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் துரித கதியில் முன்னெடுக்கப்படுகின்றன.

நாட்டில் டெங்கு நோய் பரவுதலை கட்டுப்படுத்த, ஜனாதிபதியின் செயலாளர் வெளியிட்டுள்ள சுற்றிக்கையின் பிரகாரம் டெங்கு கட்டுப்பாட்டு பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இதன் ஓர் அம்சமாக, ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி. பபாகரனின் அறிவுறுத்தலுக்கு அமைவாக பிரதேசசெயலாளர் பிரிவின் அனைத்து பிரிவுகளிலும் உள்ள கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் பணிமனைகள் மற்றும் பொது இடங்களிலும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை நேற்று முன்னெடுக்கப்பட்டது.

சமுர்த்தி தலைமையக முகாமையாளர் ந. கிருபாரன், முகாமைத்துவ பணிப்பாளர் சிவப்பிரியா சுதாகரன் ஆகியோரின் மேற்பார்வையில் இந்த டெங்கு ஒழிப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

பொதுமக்களின் குடியிருப்புகள் மாத்திரமின்றி அரச திணைக்களங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் இடங்கள் எனப் பல்வேறு பகுதிகளிலும் டெங்கு ஒழிப்பு சிரமதானங்களை வெள்ளிக் கிழமை தோறும் மேற்கொள்ளுமாறும் பிரதேச செயலாளர் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார். (ஐ)

# பள்ளிவாசல் மையவாடி சிரமதானம் மூலம் துப்புரவு

மட்டக்களப்பு, ஜன. 06

மட்டக்களப்பு புதிய காத்தான்குடி பெரிய ஜும்மா பள்ளிவாசல் மையவாடி நேற்று வெள்ளிக்கிழமை சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டது.



பள்ளிவாசலின் தலைவர் கே. எல். எம். பரீட் தலைமை யில் நடைபெற்ற இந்த சிரம தான பணியில் பள்ளிவாசலின் செயலாளர் முஹம்மத் இர்பான் உட்பட பள்ளிவாசல் நிர்வாகிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

மழை காலத்தில் ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்காக தயார்படுத்தப்பட்ட மையவாடியும் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டது. (ஐ)

கொரியாவில் போர் பதற்றம்

# தென்கொரியாவின்மீது வடகொரியா தாக்குதல்!

சியோல், ஜன. 06

தென் கொரியாவுக்கு சொந்தமான யோன்பியோங் தீவின்மீது வட கொரியா திடீரென எறிகணை தாக்குதல் நடத்தியுள்ளது.

இந்தத் தீவு தொடர்பாக இரு நாடுகளுக்கு இடையே நீண்ட ஆண்டுகளாக பிரச்னை நீடித்து வரும் நிலையில், வட கொரியாவின் இராணுவ நடவடிக்கையால் கொரிய தீபகற்பத்தில் போர் பதற்றம் உருவாகியுள்ளது.

200இற்கும் மேற்பட்ட எறிகணைகளை வீசி வட கொரியா தாக்குதல் நடத்தியுள்ளதாக தென் கொரிய இராணுவம் தெரிவித்துள்ளது. எதிர்பாராத இந்த தாக்குதலால் யோன்பியோங் தீவில் உள்ள மக்களை உடனே வெளியேறுமாறு தென் கொரிய அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. எனினும், இந்த தாக்குதலால் பொது மக்களுக்கோ அல்லது தென் கொரிய இராணுவத்துக்கோ எந்த சேதமும் ஏற்படவில்லை என்று அந்நாட்டு இராணுவம் உறுதிப்படுத்தியுள்ளது.

தென் கொரிய கூட்டுப் படைத் தலைவர்களின் செய்தி தொடர்பாளர் இந்த தாக்குதல் தொடர்பாக பேசுகையில்,

“இது கொரிய தீபகற்பத்தில் பதற்றத்தை அதிகரித்து அமைதியை குலைக்கும் ஆத்திரமூட்டும் செயல்” என்று தெரிவித்துள்ளார்.



இதனிடையே, அணு ஆயுதம் தொடர்பாக அமெரிக்கா - வட கொரியா இடையே மோதல் நீடித்து வரும் நிலையில், அமெரிக்க ஆதரவு நிலைப்பாடு கொண்ட தென் கொரியா அண்மையில் அமெரிக்காவுடன் இணைந்து கூட்டு போர் பயிற்சி மேற்கொண்டது. இந்த போர் பயிற்சி நடைபெற்ற சில நாட்களில் வட கொரியா தற்போது தாக்குதல் நடத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# 10,000 கைதிகளை விடுவிக்கும் மியன்மார்!

பாங்கொக், ஜன. 06

மியன்மாரில் சுதந்திர தினத்தை யொட்டி 10,000 கைதிகளை விடுவிக்க அந்நாட்டு ராணுவ அரசு முடிவு செய்துள்ளது. இதுகுறித்து மியன்மார் அரசு தொலைக் காட்சியான எம்ஆர்டிவி தெரிவித்துள்ளதாவது:

பிரிட்டனிடமிருந்து மியான்மர் சுதந்திரம் பெற்ற 76ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் 9,652 கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்குவதாக மியான்மர் ராணுவக் குழுவின் தலைவரும், மூத்த தளபதியுமான மின் ஆங் ஹலைங் அறிவித்துள்ளார். அதன்படி, மியான்மர் சிறையில்அடைபட்டுள்ள 114 வெளிநாட்டவர்களுக்கும் பொது மன்னிப்பு அளிக்கப்பட்டுள்ளது. அவர்கள் விரைவில்நாடு கடத்தப்படுவார்கள்.

மியன்மாரில் ராணுவ ஆட்சியை எதிர்த்ததற்காக சிறையில் அடைக்கப்பட்டுள்ள மூத்த அரசியல்வாதியும், நோபல் பரிசு பெற்றவருமான ஆங் சான் சூகி உட்பட ஆயிரக்கணக்கான அரசியல் கைதிகளுக்கும் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டுள்ளதா என்பது குறித்து உடனடியாக எந்த தகவலும் இல்லை. 76ஆவது சுதந்திர தினம் ஜனவரி 4ஆம் திகதி கொண்டாடப்பட்டதையொட்டி கைதிகள் விடுவிப்பு நடவடிக்கை நேற்று தொடங்கியது. இது நிறைவடைய இன்னும் பல நாட்கள் ஆகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

யங்கூனில் உள்ள இன்செயின் சிறைச்சாலையில் அரசியல் கைதிகள் ஏராளமானோர் அடைக்கப்பட்டுள்ளனர். அவர்களை வரவேற்க நேற்று முன் தினம் அதிகாலையில் சிறைவாசல் முன்பு ஏராளமான உறவினர்கள் குவிந்தனர்.

(அ)




# நேபாளத்துக்கு உதவி வழங்குகிறது இந்தியா

காத்மண்டு, ஜன. 06

கடந்த ஆண்டு ஏற்பட்ட நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை சீரமைக்க நேபாளத்துக்கு இந்தியா அந்நாட்டு மதிப்புப்படி ஆயிரம் கோடி ரூபாய் (75 மில்லியன் டாலர்) வழங்கும் என்று வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் தெரிவித்தார்.

இரண்டு நாள் பயணமாக நேற்று முன் தினம் நேபாள தலைநகர் காத்மாண்டு சென்ற இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர், அங்கு இந்திய நிதி உதவியுடன் கட்டப்பட்டுள்ள திரிபுவன் பல்கலைக்கழக மைய நூலகத்தை நேற்று திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் பேசிய அவர், கடந்த ஆண்டு நவம்பர் 3ஆம் திகதி நேபாளத்தின் ஜாஜர்கோட் மாவட்டத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நில நடுக்கத்தால் ஏற்பட்ட உயிரிழப்புகள் மற்றும் பேரழிவுகளை அறிந்து இந்தியாவும் வருத்தமடைந்தது.

நிலநடுக்கம் ஏற்பட்ட 48 மணி நேரத்துக்குள் இந்திய அரசு, நேபாளத்துக்கு அவசர உதவிகளை வழங்கத் தொடங்கியது. அதோடு, சாத்தியமான அனைத்து உதவிகளையும் நேபாளத்துக்கு இந்தியா வழங்கும் என பிரதமர் நரேந்திர மோடி உறுதியளித்தார்.

அதன்படி, நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்கட்டமைப்பை புனரமைப்பதற்காக நேபாள ரூபாய் மதிப்பில் 1,000 கோடி, அதாவது 75 மில்லியன் டொலர் நிதி உதவியை வழங்க இந்தியா முடிவெடுத்துள்ளது. நேபாள பிரதமர் பிரசண்டாவை நேற்று சந்தித்தபோது நான் இதனை அவரிடம் தெரிவித்தேன். நேபாள மக்களுக்கு நாங்கள் தொடர்ந்து ஆதரவாக நிற்போம். நேபாள அரசின் முயற்சிகளுக்கு பங்களிப்போம்.

நேபாளத்துக்கு இந்தியா 1 பில்லியன் அமெரிக்க டொலர் வழங்கி உள்ளது. இதில், 250 மில்லியன் டொலர் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 750 மில்லியன் டொலர் கடனாக அளிக்கப்பட்டுள்ளது. இந்தியா - நேபாளம் இடையேயான உறவு பல்வேறு துறைகளில் குறிப்பிடத்தக்க அளவில் முன்னேற்றம் கண்டுள்ளது. இது இரு நாட்டு மக்களிடையேயான தொடர்பை மேலும் வலுப்படுத்தியுள்ளது - என்றார்.

(அ)

# 15 இந்தியர்களுடன் சரக்கு கப்பலை கடத்தினர் சோமாலிய கொள்ளையர்!

புதுடில்லி, ஜன. 06

சோமாலியா அருகே 15 இந்தியர்களுடன் சரக்கு கப்பல் ஒன்று கடத்தப்பட்டுள்ளது. மத்திய ஆபிரிக்காவைச் சேர்ந்த சோமாலியாவின் கடற் பகுதியில் எம். வி. லிலா நோர்புளொக் என்ற சரக்கு கப்பல் நேற்று முன்தினம் மாலை கடத்தப்பட்டுள்ளது. இந்த கப்பலில் 15 இந்தியர்கள் உள்ளனர் என்று தகவல் வெளியானது.

இது தொடர்பாக இந்திய கடற்படை தெரிவித்திருப்பதாவது:

”லைபீரிய நாட்டின் கொடி பறந்த ம். வி. லிலா நோர்புளொக் என்ற சரக்கு கப்பல் சோமாலியாவின் கடற் பகுதியில் கடத்தப்பட்டதாகவும், இந்த கப்பலில் 15 இந்தியர்கள் உள்ளனர் என்றும் தகவல் கிடைத்தது. நேற்று (நேற்று முன்தினம்) மாலை 5 முதல் 6 மணிக்குள் இந்த கப்பல் கடத்தப்பட்டுள்ளது. அடையாளம் தெரியாத 5 முதல் 6 பேர் வரையுள்ள நபர்கள், ஆயுதங்களுடன் வந்து கப்பலை கடத்தியதாக தகவல் கிடைத்தது.

இதையடுத்து, இந்திய கடற்படை உடனடி பதில் நடவடிக்கையை எடுத்தது. கடத்தப்பட்ட சரக்குக் கப்பல் இருக்கும் இடத்தை நோக்கி இந்திய கடற்படை விமானம் அனுப்பப்பட்டது. அதோடு, கடல் பாதுகாப்புக்கு உதவும் ஐ. என். எஸ். சென்னை என்ற போர் கப்பலும் திருப்பிவிடப்பட்டது. இந்திய கடற்படை விமானம், கடத்தப்பட்ட கப்பல் இருக்கும் இடத்தை இன்று (நேற்று) அதிகாலை கண்டறிந்து அதனை



கண்காணித்து வருகிறது. மேலும், கப்பலுக்குள் உள்ளவர்களோடு தொடர்பை ஏற்படுத்தி பணியாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்தது.

இந்திய கடற்படை விமானம் கடத்தப்பட்ட கப்பலை தொடர்ந்து கண்காணித்துக்கொண்டி ருக்கும் நிலையில், ஐ. என். எஸ். சென்னை போர் கப்பலும் நெருங்கிவிட்டது. இந்த கடற்பிராந்தியத்தில் பாதுகாப்பை மேற்கொள்ளும் பிற அமைப்புகளுடன் ஒருங்கிணைந்து ஒட்டுமொத்த நிலைமையும் உன்னிப்பாகக் கண்காணிக்கப்பட்டு வருகிறது. சர்வதேச பங்குதாரர்கள் மற்றும் நட்பு நாடுகளுடன் இணைந்து இப்பகுதியில் வணிகக் கப்பல் போக்குவரத்தின் பாதுகாப்பை உறுதி செய்வதில் இந்திய கடற்படை உறுதியாக உள்ளது.” இவ்வாறு இந்திய கடற்படை தெரிவித்துள்ளது. (ஐ)

# மாணவரின் சூட்டில் சக மாணவன் பலி!

அமெரிக்காவில் பயங்கரம்




பெர்ரி, ஜன. 06

அமெரிக்காவின் மத்திய மேற்கு மாநிலமான அயோவாவில் உள்ள உயர்நிலைப் பள்ளியில் மாணவர் ஒருவர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் சக மாணவர் ஒருவர் உயிரி ழந்தார். 5 பேர் காயமடைந்த னர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

வியாழக்கிழமை காலை 7.30 மணிக்கு இந்தத் துப் பாக்கிச் சூடு சம்பவம் நடத்ததைத் தொடர்ந்து அங்கு பொலிஸார் அவசர உதவி வாகனங்களுடன் பெர்ரி உயர் நிலைப் பள்ளிக்கு விரைந்து சென்ற னர். இதுகுறித்து அயோவா பிரிவு குற்றப்புலனாய்வு உதவி இயக்குநர் மிட்ச் மோர்ட் வெடிட் கூறுகையில்,

“17 வயது மாணவர் ஒருவர் நடத்திய துப்பாக்கிச் சூட் டில் உயிரிழந்தவர் ஆறாம் வகுப்பு மாணவர். 11 - 12 வயதுடைய அம்மாணவர் காலை உணவுக்காக அங்கு வந்திருக்கலாம். இந்தச் சம்பவத்தில் 4 மாணவர்களும், ஒரு பள்ளி நிர்வாகியும் காயமடைந்துள்ளனர். இந்தச் சம்பவத்தின் பின்னணியை அறிய அதிகாரிகள் முயன்ற போது, துப்பாக்கிச் சூடு நடத்தியவர் தன்னைத் தானே சுட்டுக்கொண்ட காயத்துடன் இருந்ததைக் கண்டறிந்தனர். காயம் அடைந்தவர்களின் உயிருக்கு ஆபத்தில்லை” என்று தெரிவித்தார்.

(அ)

# 300 கிலோ போதைப்பொருளுடன் ஆறு பேர் தெற்கு கடலில் கைது!

கொழும்பு, ஜன. 06

**தெற்கு கடற்பரப்பில் படகொன்றில் சுமார் 300 கிலோ போதைப் பொருட்களுடன் ஆறு சந்தேக நபர்கள் நேற்று கைதுசெய்யப்பட்டனர்.**

இலங்கை கடற்படை மற்றும் பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினரின் கூட்டு நடவடிக்கையிலேயே சுமார் 300 கிலோ ஐஸ் மற்றும் ஹெரோயின் போதைப் பொருட்கள் கைப்பற்றப் பட்டன. சுமார் 288 பைக்கெற்றுகளாக பொதியிடப்பட்ட நிலையில் இந்தப் போதைப் பொருட்கள் கைப்பற்றப் பட்டன.

தெற்கு கடற்பரப்பில் வைத்துக் போதைப்பொருளுடன் கைப்பற்றப்பட்ட இழுவைப் படகு நேற்று காலை காலி துறைமுகத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை இலங்கை கடற்படை மற்றும் பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)



# இராஜாங்க அமைச்சர் லொகான் ரத்வத்தை என்னை துப்பாக்கி முனையில் மிரட்டினார்!

## அரசியல் கைதி நீதிமன்றில் சாட்சியம்

கொழும்பு, ஜன. 06

இராஜாங்க அமைச்சர் லொகான் ரத்வத்தை தன்னை துப்பாக்கி முனையில் அச்சுறுத்தி மரண அச்சுறுத்தல் விடுத்தார் என்று அரசியல் கைதியான பூபாலசிங்கம் சூரிய பாலன் நீதிமன்றத்தில் சாட்சியமளித்தார்.

அநுராதபுரம் சிறைச் சாலைக்குள் மதுபோதையில் நுழைந்த அமைச்சர் தமிழ் அரசியல் கைதிகளை அச்சுறுத்தியமை தொடர்பிலான வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வேளை அவர் இதனை தெரிவித்தார்.

அந்த சமயம், சந்தேகநபரான இராஜாங்கஅமைச்சர் நீதிமன்றத்தில் பிரசன்னமாகியிருந்தார்.

சூரியபாலன் தனது சாட்சியத்தில் மேலும் தெரிவித்தவை வருமாறு,

விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு புத்துயிர் கொடுக்க முயன்ற குற்றச்சாட்டில் என்னை 2019 ஜனவரி 8 ம் திகதி புளியங்குளம் பொலிஸார் கைது செய்தனர். ஏனைய 11அரசியல் கைதிகளுடன் நான் தடுத்து வைக்கப்பேட்டேன் என சூரிய பாலன் தெரிவித்துள்ளார்.

சம்பவ தினம் சிறைச் சாலைகள் அமைச்சர் எங்களை சந்திக்க விரும்புகின்றார் விடுதலைக்கான கையெழுத்துகளை பெற விரும்புகின்றார் என சிறைச்சாலையின் பாதுகாப்பு அதிகாரி தெரிவித்தார்.

எங்களை வெளியில் அழைத்து சென்று வரிசையாக நிற்க செய்தனர். சிறைச்சாலையின் பிரதான அதிகாரி தலைமை சிறைக் காவலர் பல பொலிஸ் அதிகாரிகள் அங்கு காத்திருந்தனர்.

ரீசேர்ட், தொப்பி அணிந்திருந்த இராஜாங்க அமைச்சர், நாங்கள் தடுத்து வைக்கப்பட்ட சம்பவங்கள் குறித்து கேள்வி எழுப்பினார். நான் எனக்கு சிங்களம் தெரியாது என்று தெரிவித்தேன். அந்த சமயம், என்னை முழங்காலில் இருத்தி கைத்துப்பாக்கியை எடுத்து எனது நெற்றியில் வைத்து நான் பொய் சொல்கின்றேன் - என்று கூறி என்னை அச்சுறுத்தினார் - என்றார். (ஐ)



# காலி சிறையின் செயல்பாடுகள் மட்டுப்பாட்டில்!

கொழும்பு, ஜன. 06

நேற்று வெள்ளிக்கிழமை முதல் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் காலி சிறைச் சாலையின் செயல்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

மூளைக்காய்ச்சல் காரணமாக கைதி ஒருவர் உயிரிழந்தமையை அடுத்தே சிறைச்சாலையின் நடவடிக்கைகள் மட்டுப் படுத்தப்பட்டுள்ளன என்று சிறைச்சாலைகள் திணைக்களத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ஐ)

# குளவி கொட்டி மூதாட்டி பலி!

நுவரெலியா, ஜன. 06

குளவி கொட்டியதில் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட மூதாட்டி ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

நுவரெலியா - ஹற்றன் - திக் ஓயா படல்கல தோட்டத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இந்த மரணம் பதிவானது.

உயிரிழந்த மூதாட்டி மற்றும் 14 வயது சிறுமி உட்பட 6 பேர் தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்தபோது குளவி கொட்டியதால் திக் ஓயா மருத்துவமனையில் சேர்க்கப் பட்டனர்.

இவர்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த 78 வயதான பெண் ஒருவர் நேற்றுக் காலை உயிரிழந்தார் என்று மருத்துவமனை தெரிவித்தது. (ஐ)

# தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும்!

## முன்னாள் அரசியல் கைதி கோரிக்கை

கொழும்பு, ஜன. 06

சகல வேதனைகளையும் சந்தித்து உடலாலும் உள்ளத்தாலும் சோர்ந்து போயிருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற பெயரில் நீண்டகாலம் சிறை வைக்கப்பட்டிருக்கும் மீதமுள்ள 14 தமிழ் அரசியல் கைதிகளின் விரைவான விடுதலைக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆவன செய்ய வேண்டும் - இவ்வாறு நீண்டகால சிறையின் பின்னர் ஜனாதிபதியின் பொது மன்னிப்பில் விடு தலை செய்யப்பட்ட தேவதாசன் கனகசபை வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜனாதிபதியின் வருகையை முன்னிட்டு அவர் வெளியிட்ட பதிவில்,

யாழ்ப்பாணத்துக்கு வருகைதரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கொள்கை, கோட்பாடுகளுக்கு அப்பாற்பட்டு, அவரால் மன்னித்து விடுதலை செய்யப்பட்டவன் என்ற வகையில் நன்றி உணர்வுடன் அவரை வரவேற்கும் கடமை எனக்கு உண்டு. இந்தப் பதிவு மட்டுமே அதற்குப் போதுமானது.

தேர்தலில் படுதோல்வியை தழுவிய ஒரு கட்சியின் ஒரேயொரு பாராளுமன்ற உறுப்பினராக இருந்தும் மிகவும் சிக்கலான சூழ்நிலையைச் சாதகமாக்கி பிரதமராகி பின்னர் ஜனாதிபதியானமை மூலம் மிகச்சிறந்த சாமர்த்தியசாலி என்பதைச் சந்தேகத்துக்கிடமின்றி நீங்கள் நிரூபித்து விட்டீர்கள்.

உங்கள் யாழ். வருகையின் நோக்கம் எதுவாகவும் இருக்கட்டும். அபிவிருத்தி என்ற பெயருடன் காட்சிதரும் உயர்ந்த கட்டடங்கள் உங்கள் கண்களை மறைத்தாலும் அவற்றின் பின்னால் கேட்கும் அவலக்குரல்களை உங்கள் காதுகள் உள்வாங்கட்டும்.

பாதிக்கப்பட்ட மக்களின் வலியும் வேதனையும் ஆவேசமாக வெளிப்படத்தான் செய்யும். உங்கள் சொற்களால் வேடிக்கையாகக்கூட அவர்களை மேலும் காயப்படுத்திவிடாதீர்கள். முடியுமானால் அவர்களிடமிருந்து நேரடியாக விவரமறிந்து கொள்ளுங்கள்.

இறுதியாக என் சார்பில் ஒரு கோரிக்கை - சகல வேதனைகளையும் சந்தித்து உடலாலும் உள்ளத்தாலும் சோர்ந்து போயிருக்கும் ( எல். ரி. ரி. ஈ. என்ற பெயரில் ) நீண்டகாலம் சிறைவைக் கப்பட்டிருக்கும் மீதமுள்ள 14 கைதிகளின் விரைவான விடுதலைக்கு ஆவன செய்து உதவுங்கள் - என்றுள்ளது. (ஐ)

# விபத்தில் சிறுமி பலி; தயார் படுகாயம்!

கொழும்பு, ஜன. 06

நீர்கொழும்பு பிரதேசத்தில் கனரக வாகனம் ஒன்று மோட்டார் சைக்கிளை மோதிய விபத்தில் 13 வயது சிறுமி உயிரிழந்தார். அவரின் தாயார் படுகாயமடைந்தார்.

இந்த சம்பவம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நீர்கொழும்பில் இடம்பெற்றது.

சிலாபத்தில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த கனரக வாகனம் மற்றும் மோட்டார் சைக்கிளை மோதியதில் இந்த விபத்து இடம் பெற்றது.

இந்த விபத்தில் சிறுமி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். சிறுமியின் தயார் நீர்கொழும்பு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

விபத்துக் குறித்து மேலதிக விசாரணைகளை நீர்கொழும்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# 'யுக்திய' நடவடிக்கையில் 1,184 சந்தேகநபர்கள் கைது!

கொழும்பு, ஜன. 06

'யுக்திய' நடவடிக்கையில் நேற்று நள்ளிரவு முடிவடைந்த 24 மணி நேரத்தில் போதைப் பொருள் மற்றும் பாதாள உலகக் குழுவுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் ஆயிரத்து 184 பேர் கைது செய்யப் பட்டுள்ளனர். இவர்களில் 59 பேர் விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளனர் என்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு நேற்று வெள்ளிக்கிழமை தெரிவித்தது.

அத்துடன், போதைப்பொருள் பாவனைக்கு அடிமையான 29 பேர் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் பட்டியலில் இருந்த 84 சந்தேக நபர்கள் இந்த நடவடிக்கையில் கைது செய்யப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மேலும், 23 சந்தேக நபர்கள் தொடர்பில் சட்டவிரோத சொத்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்போது 337 கிராம் ஹெரோயின், 242 கிராம் ஐஸ், 6 கிலோ 629 கிராம் கஞ்சா என்பன கைப்பற்றப்பட்டன என்றும் அமைச்சு தெரிவித்தது.(ஐ)

# கார்களை இறக்குமதி செய்ய நடவடிக்கை!

கொழும்பு, ஜன. 06

கார்களை மீண்டும் இறக்குமதி செய்யத் தயாராகி வருவதாக வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதன்படி, 1000 சி. சிக்கு குறைவான என்ஜின் திறன் கொண்ட கார்கள் இறக்குமதி செய்யப்படவுள்ளன.

நிலையான வெளிநாட்டு கையிருப்பை பராமரிக்க குறைந்தபட்ச இயந்திர திறன் கொண்ட கார்களை மட்டுமே இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்நிலையில், கார்கள் இறக்குமதிக்கு தேவையான நடவடிக்கைகள் ஒரு மாத காலத்துக்குள் முன்னெடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## 13ஆவது...

அத்துடன், மாகாண மட்டத்தில் வலுவான பொருளாதாரத்தை கட்டியெழுப்ப அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் போதுமானவை என்றும் கூறினார்.

13ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை தங்கள் மாகாணத்தின் அபிவிருத்திக்காக அனைத்து மாகாணங்களும் தொடர்ச்சியாக பயன்படுத்த வேண்டும். மேலும், மாகாண மட்டத்தில் சுயாதீன பொருளாதாரத்தை உருவாக்குவது தொடர்பிலான தெரிவை ஜப்பான், கொரியா, ஐக்கிய இராச்சியம், பிரான்ஸ் போன்ற நாடுகளிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும் என்றும் ஜனாதிபதி கூறினார். (ஐ)

## யாழ்...

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுடன் நேற்று மாலை யாழ்ப்பாணத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க, யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ஸ்ரீசற்குண ராஜா, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய பிரதிநிதிகளும் இதில் கலந்துகொண்டனர்.

இதன்போது மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகள் தொடர்பில் ஜனாதிபதிக்கு சுட்டிக் காட்டப்பட்டது.

விடுதிகளில் உள்ள குறைபாடு, முகாமைத்துவ பீடத்துக்கான பேருந்து வசதிகளை ஏற்படுத்தல், சித்த மருத்துவ துறையை பீடமாக தரமுயர்த்தல், இணைந்த சுகாதார விஞ்ஞான பீட மாண வர்களுக்கான உள்ளக பயிற்சி வழங்குதல் போன்ற விடயங்கள் இதன்போது மாணவர்களால் சுட்டிக் காட்டப்பட்டது.

பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பீடங்களில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட 37 மாணவர்கள் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றிருந்தனர். (ஐ)

## பெப்ரவரி...

மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், ”மின் உற்பத்தியில் மேலும் புதுப்பிக்கத்தக்க வலுசக்தியைப் பெற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன்படி, புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மூலம் 70 வீத மின்சாரம் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயித்து மின் உற்பத்தித் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அந்தத் திட்டத்தின்படி, 2024ஆம் ஆண்டில், சுமார் 600 மெகா வாட்ஸ் மின்சாரத்தை புதுப்பிக்கத்தக்க சக்தி மூலம் பெற எதிர்பார்க்கிறோம்.

சோலர் பனல்கள் அமைக்கும் பணியும் அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. 10 மெகாவாட்ஸூக்கு குறைவான திட்டங்களுக்கு விரைவான வேலைத் திட்டத்தை செயல்படுத்த எதிர்பார்க்கிறோம். மன்னார், பூநகரி மற்றும் அம்பாந்தோட்டை பிரதேசங்களுக்கான பல்வேறு பெரும் திட்டங்கள் உற்பத்தித் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

இதேபோன்று, நீர் மின்சாரம், சூரிய சக்தி மற்றும் காற்றாலைகள் ஆகியவற்றை பயன்படுத்தி புதுப்பிக்கத்தக்க வலுசக்தியை உற்பத்தி செய்வதன் மூலம் மின்சாரக் கட்டணத்தை மேலும் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளோம்.

மின்சார கட்டணத்தைக் குறைப்பதற்கான உரிய தரவுகள் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவிடம் வழங்கப்பட்டுள்ளன. இந்த மாத இறுதி அல்லது அடுத்த மாதம் முதல் வாரத்தில் மின் கட்டணத்தை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் 2024 ஆம் ஆண்டில் நாம் எதிர்பார்க்கும் இலக்குகளை நோக்கி நகர்வதே எமது நோக்கமாகும் - என்றார். (அ- ஐ)

## ஜனாதிபதி...

நியமிப்பதை மகிந்த ராஜபக்ஷ விரும்பவில்லை.

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக தம்மிக பெரேராவும், பிரதமர் வேட்பாளராக நாமல் ராஜபக்ஷவும் நியமிக்கப்படுவார்கள். நாமல் ராஜபக்ஷவை ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்துவது மேலும் பிற்போடப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார். (ஐ)

## வடக்கு...

நாட்டின் பொருளாதாரத்துக்கு 50 வீதத்துக்கும் அதிகமான பங்களிப்பை வழங்கும் மேல் மாகாணம் நாட்டின் பொருளாதாரத்தின் இயந்திரமாக செயல்படுகின்றது. வடக்கு, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களையும் அதனுடன் இணைத்துக்கொண்டு ஐந்து பிரதான இயந்திரங்களுடன் நாட்டின் பொருளாதாரத்தை பலப்படுத்த எதிர்பார்த்துள்ளேன் என்றும் அவர் கூறினார்.

வவுனியா மாவட்ட கலாசார மண்டபத்தில் நேற்று நடைபெற்ற வன்னி (வவுனியா, முல்லைத்தீவு, மன்னார்) மாவட்ட விசேட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்திலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வவுனியா, முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களின் கல்வி, சுகாதாரம், மீள்குடியமர்த்தல், காணி, மின்சாரம்,குடிதண்ணீர், சுற்றுலா, வனவள பாதுகாப்பு, மீன்பிடித் துறைகளில் காணப்படும் பிரச்னைகள் தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்பட்டதோடு, சில பிரச்னைகளுக்கான தீர்வுகளை ஜனாதிபதி அவ்விடத்திலேயே அறிவித்தார்.

“எமது நாட்டின் பொருளாதாரத்துக்கு ஓர் இயந்திரம் மாத்திரமே உள்ளது. அதற்கு 50 வீத பங்களிப்பு மேல் மாகாணத்திலிருந்தே பெறப்படுகிறது. மற்றைய மாகாணங்களிலிருந்து கிடைக்கும் பொருளாதார பங்களிப்பு மந்தமான நிலையிலேயே உள்ளது.

நாடு என்ற வகையில் முன்னேறிச் செல்வதற்கு இயந்திரங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். அதற்காக மற்றைய மாகாணங்களின் பொருளாதாரத்தையும் பலப்படுத்த வேண்டும். அதற்காக சில மாகாணங்கள் அறியப்பட்டுள்ளன.

வடக்கு, மேற்கு, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்கள் இலங்கையின் தேசிய பொருளாதாரத்துக்குப் பெருமளவான பங்களிப்பை வழங்கும் மாகாணங்களாக மேம்படுத்தப்பட வேண்டும். தற்போது நிதி பலமும் இருப்பதால் இடைநிறுத்தப்பட்ட வேலைத்திட்டங்களை மீள ஆரம்பிக்க முடியும். இதேபோல் வெளிநாட்டு நிதியில் முன்னெடுக்கப்படும் திட்டங்களை தொடர்வதற்கான உதவிகளும் கிடைக்கப் பெறவுள்ளன.

மேலும் வட மாகாணத்திடமிருந்து இந்நாட்டின் அபிவிருத்திக்கு பெரும் பங்களிப்பை பெற்றுக்கொள்ள வேண்டிய தேவையுள்ளது. வட மாகாணத்திலிருந்து காற்று மற்றும் வெப்ப நிலை காரணமாக மீள்புதுப்பிக்கத்தக்க வலுசக்தி தயாரிப்புக்கு அதிக வாய்ப்புகள் உள்ளன.

வடக்கு மாகாணத்தில் தயாரிக்கூடிய மின்சாரத்தின் அளவை கணக்கிட்டு பார்க்கும்போது எஞ்சிய தொகையை இந்தியாவுக்கு விற்பனை செய்து பணம் பெறக்கூடிய நிலையும் உள்ளது. இதற்கான பேச்சுகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வட மாகாணத்தின் விவசாயிகள் திறமையும் செயல்திறனும் கொண்டவர்கள். விவசாய நவீனமயப்படுத்தல் வேலைத்திட்டத்தின் கீழ் வட மாகாணத்தின் விவசாய நிலங்களை முகாமைத்துவம் செய்வதன் வாயிலாக ஏற்றுமதி விவசாய தொழிற்துறையை பலப்படுத்தலாம்” என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். (அ -ஐ)

# மருத்துவரான தமிழ் பெண் நோர்வேயில் சுட்டுக்கொலை!



ஒஸ்லோ, ஜன. 06

நோர்வேயின் எல்வெரும் பகுதியில் தமிழ் பெண் ஒருவர் சுட்டுக்கொலை செய்யப்பட்டார் என்று அந்நாட்டு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உள்ளூர் வைத்தியசாலைக்கு வெளியே காரில் வைத்து குறித்த பெண் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் போது காரில் மற்றுமொரு நபரும் பலத்த காயங்களுடன் காணப்பட்டுள்ளார்.

அவரை மீட்ட பொலிஸார் ஒஸ்லோவில் உள்ள மருத்துவமனைக்கு விமானம் மூலம் கொண்டு செல்லப்பட்ட போதிலும் அவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த பெண் கொலைசெய்யப்பட்ட யுவதி முப்பது வயதான ராகவி வரதராஜன் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார். இவர், பல் மருத்துவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், உயிரிழந்த பெண் பலமுறை உயிர் அச்சுறுத்தலை எதிர்கொண்டார் என்றும், அது குறித்து பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது எனவும் அறிய வருகின்றது.

எவ்வாறாயினும், இந்த முறைப்பாடு தொடர்பில் பொலிஸார் உரிய கவனம் செலுத்தவில்லை எனவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, நோர்வேயின் கொலை விகிதம் அதிகரித்துள்ளதாகவும், கடந்த 10 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு 2023ஆம் ஆண்டில் அதிகமான மக்கள் (36 பேர்) கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

2013 ஆம் ஆண்டுக்குப் பிறகு, வருடாந்த கொலை எண்ணிக்கை 30ஐத் தாண்டியது இதுவே முதல் முறையாகும். புத்தாண்டு தினத்திலிருந்து மேலும் ஆறு கொலைகள் பதிவாகியுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## சிமெந்தின்...

சிமெந்து பைக்கெற்றின் விலை, 1,980 - 2,300 ரூபாய் வரை விற்பனையா னது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஜனாதிபதியை...

சென்றார். அங்கு வன்னி மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்துக்கு தலைமை தாங்கியிருந்தார்.

இந்நிலையில் ஜனாதிபதியை சந்திக்க வடக்கு - கிழக்கு வலிந்துகாணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் முற்பட்டனர். இவர்களை தடுத்துநிறுத்திய பொலிஸார் ஒருவருக்கு மாத்திரம் அனுமதி வழங்கப்படும் என தெரிவித்தனர்.

இதனையடுத்து ஜனாதிபதியை சந்திக்க அனுமதி கோரி வட, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனைத் தொடர்ந்து பொலிஸாரும் போராட்டக்காரர்களுக்கும் ஏற்பட்ட முரண்பாட்டை தொடர்ந்து குறித்த பகுதியில் பதற்றநிலை ஏற்பட்டது.

மேலும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்கத்தின் தலைவி சி.ஜெனிற்றா உட்பட்ட இருவரை பொலிஸார் கைது செய்தனர்.

கைதுசெய்யப்பட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்கத்தின் தலைவி சி. ஜெனிற்றா உட்பட்ட குழுவினருக்கு போராட்டங்களில் ஈடுபடுவதற்கு நீதிவான் நீதிமன்றம் நேற்று தடை விதித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

## பிரதான...

மற்றும் மன்னார் மாவட்டங்களின் கல்வி,சுகாதாரம், மீள்குடியமர்த்தல், காணி, மின்சாரம்,குடிநீர், சுற்றுலா, வனவன பாதுகாப்பு, மீன்பிடித் துறைகளில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்பட்டதோடு, சில பிரச்சினைகளுக்கான தீர்வுகளை ஜனாதிபதி அவ்விடத்திலேயே அறிவித்தார்.

கொழும்பு, கண்டி, வடக்கு இந்நாட்டின் மூன்று பிரதான கல்வி கேந்திர நிலையங்களாக உருவாக்கப்படும் என்றும் இதன்போது உறுதியளித்தார். (ஐ)

## நாட்டில்...

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தலைமையில் நடைபெறவுள்ள பொங்கல் விழாவிலேயே இந்த ஜல்லிகட்டு போட்டி நடைபெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## மூதூரில்...

முன்னதாக இலுப்பங்குளத்தில் புத்தர் சிலை நிறுவப்பட்டமைக்கு எதிராக அப்பகுதி மக்கள் கடும் எதிர்ப்புகளை வெளியிட்டிருந்தனர். அந்த எதிர்ப்புகளை மீறி தொடர்ந்து விகாரை நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. இந்த நிலையில், மூதூரில் புத்தர் சிலை நிறுவப்பட்டுள்ளது. (ஐ-04)

## தமிழரசின்...

குறிப்பிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

அந்த அறிக்கையில், “இலங்கை தமிழரசு கட்சியின் மத்திய செயல்குழு கூட்டம் 2023 ஆம் ஆண்டு மே மாதம் 5ஆம் நாள் நடைபெற்றது. இதன் போது எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி தமிழரசு கட்சியின் தேசிய மாநாடு 2024 ஜனவரி 27, 28ஆம் நாட்களில் என், சி, வீதி உப்புவெளி, திருகோணமலை என்னும் முகவரியில் அமைந்துள்ள “ஜேக்கப் வீச் றிசோட்” மண்டபத்தில் நடைபெறும்.

கட்சியின் தலைவர் மாவை. சோ. சேனாதிராசாவின் தலைமையில் நடைபெறும். மேற்படி மாநாட்டு கூட்டம் முற்பகல் 10.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறுமென்பதை கட்சி அமைப்பு விதியான 10(உ) இற்கு அமைவாக இத்தால் தெரியப்படுத்துகின்றேன் -என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# நாட்டில் 25 வீதமான மக்கள் கடும்வறுமையின் பிடியில்!

## தொகை மதிப்பு திணைக்களம்

கொழும்பு, ஜன. 06

**நாட்டில் கடும் வறுமையில் வாழும் மக்களின் எண்ணிக்கை 55 இலட்சமாக அதிகரித்துள்ளது. பொருளாதார நெருக்கடி மற்றும் வரிச்சுமை காரணமாக கடுமையான வறுமையில் வாடும் மக்களின் எண்ணிக்கையே இவ்வாறு அதிகரித்துள்ளது.**

தொகை மதிப்பீட்டு புள்ளிவிபரவியல் திணைக்களம் இந்த தகவல்களை வெளியிட்டுள்ளது. கடந்த 2019ஆம் ஆண்டில் வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழ்ந்த மக்களின் எண்ணிக்கை 25 இலட்சமாக காணப்பட்டது.

இது மொத்த சனத்தொகையில் 11.9 சதவீதம் என்பதுடன் தற்போது இந்த எண்ணிக்கை 25 சதவீதமாக அதிகரித்துள்ளது.

சமுர்த்தி, அஸ்வெசும போன்ற நலன்புரித் திட்டங்களை வழங்க வேண்டியவர்களின் எண்ணிக்கை 25 வீதமாக உயர்வடைந்துள்ளது.

எரிபொருள், எரிவாயு உள்ளிட்ட சுமார் 80 பண்டங்களுக்கு பெறுமதி சேர் வரி அறவீடு செய்யப்படுவதனால் வறிய மக்களின் எண்ணிக்கை வெகுவாக உயர்வடைந்துள்ளது. உண்மையான வறிய மக்களின் எண்ணிக்கை மேலும் உயர்வடையக்கூடும் என தொகை மதிப்பீட்டு புள்ளிவிபரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஐ)

# பூநகரி பிரதேசத்துக்கு ஜனாதிபதி நேற்று கண்காணிப்பு பயணம்!

கிளிநொச்சி, ஜன. 06

வடக்கு மாகாணத்துக்கு நான்கு நாள் பயணமாக வந்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று பூநகரி பிரதேசத்துக்கு சென்றார்.

இதன்போது, நகர அபிவிருத்தி அதிகார சபையினால் தயாரிக்கப்பட்ட பூநகரி நகர அபிவிருத்தி திட்டத்தை மீளாய்வு செய்வதற்காக பூநகரி பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலிலும் ஜனாதிபதி கலந்துகொண்டார்.

நகர அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் பூநகரி நகர அபிவிருத்திக்காக 2024ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் 50 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கிணங்க, உரிய அபிவிருத்தி நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்த ஜனாதிபதி, சுற்றுலாத் துறையை மேம்படுத்துதல் மற்றும் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி உற்பத்தித் திட்டங்களுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் ஆகியவற்றில் விசேட கவனம் செலுத்துமாறும் அறிவுறுத்தினார்.



அதன் பின்னர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பூநகரி கோட்டையை பார்வையிட்டார்.

மேலும், பூநகரி பிரதேசத்தில் இயங்கிவரும் உயர்தர முந்திரி உற்பத்தி நிறுவனமான 'வன்னி கெசு' முந்திரி உற்பத்தி நிறுவனத்துக்கு ஜனாதிபதி சென்று அதன் செயல்பாடுகளையும் அவதானித்தார்.

இயந்திரவியல் பொறியாளரான யுவதி ஒருவரால் நடத்தப்படும் இந்த கைத்தொழில் நிறுவனம், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பல இளையோருக்கு வேலை வாய்ப்பை வழங்கியுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

அவரின் இந்தப் பயணத்தில், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற உறுப்பினர்களான தர்மலிங்கம் சித்தார்த்தன், அங்கஜன் இராமநாதன், வட மாகாண ஆளுநர் பி. எஸ். எம். சார்ள்ஸ், ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க ஆகியோரும் உடனிருந்தனர். (ஐ)

# உகண்டா ஜனாதிபதியுடன் சபாநாயகர் மகிந்த சந்திப்பு

கொழும்பு, ஜன. 06

பொதுநலவாய அமைப்பின் சபாநாயகர்களின் 27ஆவது மாநாட்டில் கலந்துகொள்வதற்காக உகண்டா சென்றுள்ள சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன உகண்டாவின் ஜனாதிபதி யோவேரி முசவேனி, பிரதமர் ரொபின் நபஞ்ஜ மற்றும் உகண்டா சபாநாயகர் அனிடா அனெத் அமங் ஆகியோரை சந்தித்தார்.

அத்துடன், சபாநாயகருக்கும் உகண்டாவின் வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் ஓரியம் ஹென்றி ஒய்கெலோ ஆகியோருக்கும் இடையிலும் சந்திப்பு நடைபெற்றது.

இந்தச் சந்திப்புகளில் இலங்கைக்கும் உகண்டாவுக்கும் இடையிலான இரு தரப்பு உறவுகளை மேம்படுத்துவது குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

இந்தச் சந்திப்புகளில் பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம், பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர மற்றும் உகண்டாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் வி. கணநாதன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஐ)

## மசாஜ் நிலையங்களில் 50,000 இளையோர் பணியில்!

கொழும்பு, ஜன. 06

'ஸ்பா' என்ற பெயரில் நடத்தப்படும் வரும் மசாஜ் நிலையங்களில் சுமார் 50 ஆயிரம் இளையோர் பணிபுரிகின்றனர் என்று தெரியவந்துள்ளது.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பிலேயே இந்த விடயம் தெரியவந்துள்ளது.

இதன்படி, நாடு முழுவதும் சுமார் 6 ஆயிரம் மசாஜ் நிலையங்கள் உள்ளன என்று சுதேச மருத்துவ இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயக்கொடி தெரிவித்துள்ளார்.

இருப்பினும், இந்த மசாஜ் நிலையங்கள் ஆயுள்வேத திணைக்களத்தில் பதிவு செய்யப்படவில்லை - என்றும் அவர் தெரிவித்தார்.

## மட்டக்களப்பில் சோதனை மூவர் சந்தேகத்தில் கைது!

மட்டக்களப்பு, ஜன. 06

மட்டக்களப்பில் நேற்று முன்னெடுக்கப்பட்ட யுக்திய நடவடிக்கையின்போது மூன்று பேர் கைது செய்யப்பட்டனர். மட்டக்களப்பு நகருக்குள் நுழைந்த வாகனங்களை சோதனையிட்டபோதே இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சோதனை நடவடிக்கையின் போது பேருந்துகளில் இருந்து அனைத்து பயணிகளையும் கீழ் இறக்கி அவர்களையும் அவர்களின் உடைமைகள் அனைத்தும் சோதனையிடப்பட்டன.

இதில் கைது செய்யப்பட்டவர்கள் விசாரணையின் பின்னர் விடுவிக்கப்படுவர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## பேராதனை பல்கலையின் ஊழியருக்கு கொரோனா!

கொழும்பு, ஜன. 06

பேராதனை பல்கலைக்கழகத்தின் ஊழியர் ஒருவருக்கு கொரோனா தொற்று கண்டுபிடிக்கப்பட்டது. இதனால், ஊழியர்கள் முகக்கவசம் அணிய வேண்டும் என பல்கலைக்கழக சுகாதார நிலையம் அறிவுறுத்தியுள்ளது.

பேராதனை பல்கலைக்கழக சுகாதார நிலையத்தில் காய்ச்சல், தடிமன் என வந்த செனட் பணிமனையின் ஊழியருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

தனிமைப்படுத்தப்பட்ட அந்த நபர் நேற்று வெள்ளிக்கிழமை உடனடியாக பேராதனை போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இதன் காரணமாக மீண்டும் ஊழியர் மத்தியில் தொற்று அச்சநிலை காணப்பட்டது. (ஐ)

## யுக்திய நடவடிக்கைக்கு ஆதரவாக வீதி சோதனை சாவடிகள் அமைப்பு

கொழும்பு, ஜன. 06

நாட்டில் போதைப்பொருள் மற்றும் பாதாள உலகக் குழுக்களின் செயல்பாடுகளை கட்டுப்படுத்துவதற்காக பொலிஸாரால் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் விசேட நடவடிக்கையான 'யுக்திய'வின் ஒரு பகுதியாக குறிப்பிட்ட சில பிரதேசங்களில் விசேட போக்குவரத்து சோதனை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த விசேட போக்குவரத்து நடவடிக்கை நேற்று ஆரம்பமானது. இந்த நடவடிக்கை ஒரு வார காலத்துக்கு முற்பகல் 10.00 மணி முதல் பிற்பகல் 02.00 மணி வரை அமுலில் இருக்கும் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு - கண்டி வீதியில் களனி பல்கலைக்கழக பழைய கட்டடம் வரையிலும், கொழும்பு - நீர்கொழும்பு வீதியில் நீர்கொழும்பு ஒலியமுல்ல பாடசாலை வரையிலும் பஸ்கள் உள்ளிட்ட வாகனங்கள் சோதனைக்கு உட்படுத்தப்படும் - என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## நல்லிணக்க பணிமனையை நிறுவுவதற்கு நடவடிக்கை!

கொழும்பு, ஜன. 06

தேசிய ஒற்றுமைக்கும் நல்லிணக்கத்துக்குமான பணிமனை சட்டமூலம், மத்தியஸ்த சபை (திருத்த) சட்டமூலம், வலுவுறுத்தல் சட்டமூலம் ஆகிய மூன்று சட்டமூலங்களுக்கு நல்லிணக்கம் மற்றும் தேசிய ஒற்றுமை பற்றிய துறைசார் மேற்பார்வை குழுவில் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

நல்லிணக்கம் மற்றும் தேசிய ஒற்றுமை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தலைமையில் கூடியபோதே இவ்வாறு அங்கீகாரம் வழங்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் நீதி, சிறைச்சாலைகள் விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு, சட்டமா அதிபர் திணைக்களம், சட்டவரைஞர் திணைக்களம், தேசிய ஒருமைப்பாட்டு மற்றும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகம் மற்றும் மத்தியஸ்த சபைக்கான ஆணைக்குழு போன்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டிருந்தனர்.

இங்கு தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்துக்கான பணிமனையால் முன்னெடுக்கப்படும் செயல்பாடுகள் மற்றும் அதன் உறுப்பினர்களை நியமித்தல் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. இதன்படி, இந்த பணிமனைக்கான உறுப்பினர்களை நியமிப்பது தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழுவின் பரிந்துரையை நீதி, சிறைச்சாலைகள் விவகாரங்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சருக்கு அறிவிக்கத் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன், கிராம மட்டங்களில் சகவாழ்வு மையங்களை அமைப்பது தொடர்பிலும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது. கிராம மட்டத்தில் முரண்பாடுகள் ஏற்படும்போது அவற்றை விரைவில் அறிந்து தீர்ப்பதற்குத் தயார்படுத்துவதே இந்த அலுவலகத்தின் நோக்கமாக இருப்பதாக அதிகாரிகள் மேலும் சுட்டிக்காட்டினர்.

இதேவேளை, மத்தியஸ்த சபை (திருத்த) சட்டமூலம் மற்றும் மத்தியஸ்தத்திலிருந்து விளைகின்ற சர்வதேச தீர்த்து வைத்தல் உடன்படிக்கைகளை ஏற்று அங்கீகரித்தல் மற்றும் வலுவுறுத்தலும் சட்டமூலம் என்பனவும் ஆராயப்பட்டு அங்கீகரிக்கப்பட்டன. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 06.01.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# தென்னாபிரிக்காவுடனான டெஸ்ட் இந்தியா 7 விக்கெட்களால் வெற்றி!

## தொடர் சமநிலையில் நிறைவு



கேப்டவுன், ஜன. 06

தென்னாபிரிக்காவுக்கு எதிரான கடைசி மற்றும் 2ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி 7 விக்கெட்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் டெஸ்ட் தொடரை இந்திய அணி 1-1 என்ற கணக்கில் சமநிலையில் முடித்தது.

கேப்டவுனில் நடந்த 2ஆவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க அணி முதல் இன்னிங்ஸில் 23.2 ஓவர்களில் 55 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

கைல் வெர்ரைன் (15), டேவிட் பெடிங்ஹாம் (12) ஆகியோர் மட்டுமே இரு வரிசை இலக்க ஓட்டங்கள் சேர்த்தனர். இந்திய அணி தரப்பில் முகமது சிராஜ் 6 விக்கெட்களையும், ஜஸ்பிரீத் பும்ரா, முகேஷ் குமார் ஆகியோர் தலா 2 விக்கெட்களையும் வீழ்த்தினர்.

இதையடுத்து துடுப்பெடுத்தாடிய இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 34.5 ஓவர்களில் 153 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. அதிகபட்சமாக ரோஹித் சர்மா 39, ஷுப்மன் கில் 36, விராட் கோலி 46 ஓட்டங்கள் சேர்த்தனர். தென்னாபிரிக்க அணி சார்பில் ரபாடா, நந்த்ரே பர்கர், லுங்கி நிகிடி ஆகியோர் தலா 3 விக்கெட்கள் வீழ்த்தினர்.

98 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் 2ஆவது இன்னிங்ஸை விளையாடிய தென்னாபிரிக்கா முதல் நாள் ஆட்டத்தின் முடிவில் 17 ஓவர்களில் 3 விக்கெட்கள் இழப்புக்கு 62 ஓட்டங்கள் சேர்த்தது. அய்டன் மார்க்ரம் 36, டேவிட் பெடிங்ஹாம் 7 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தனர். நேற்று 2ஆவது நாள் ஆட்டத்தை தொடர்ந்த தென்னாபிரிக்க அணியானது ஜஸ்பிரீத் பும்ராவின் வேகத்தில் ஆட்டம் கண்டது.

பெடிங்ஹாம் 11, கைல் வெர்ரைன் 9, மார்கோ யான்சன் 11, கேசவ் மகாராஜ் 3 ஓட்டங்களில் பும்ரா பந்தில் நடையை கட்டினர். ஒரு புறம் விக்கெட் சரிந்தாலும் தாக்குதல் ஆட்டம் தொடுத்து தனது 7ஆவது சதத்தை விளாசிய அய்டன் மார்க்ரம் 103 பந்துகளில், 2 சிக்ஸர்கள், 17 பௌண்ட்ரிகளுடன் 106 ஓட்டங்கள் விளாசிய நிலையில் முகமது சிராஜ் பந்தில் ஆட்டமிழந்தார்.

இதைத் தொடர்ந்து காகிசோ ரபாடா 2 ரன்னில் பிரசித் கிருஷ்ணா பந்திலும், லுங்கி நிகிடி 8 ஓட்டங்களில் பும்ரா பந்திலும் வெளியேற 36.5 ஓவர்களில் 176 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது தென்னாபிரிக்க அணி. இந்திய அணி தரப்பில் ஜஸ்பிரீத் பும்ரா 6 விக்கெட்களையும், முகேஷ்குமார் 2 விக்கெட்களையும் வீழ்த்தினர். முகமது சிராஜ், பிரசித் கிருஷ்ணா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை கைப்பற்றினர்.

79 ஓட்டங்கள் இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 12 ஓவர்களில் 3 விக்கெட்கள் இழப்புக்கு 80 ஓட்டங்கள் எடுத்து 7 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதன் மூலம் கேப்டவுன் டெஸ்ட் போட்டியில் வெற்றி பெற்ற ஆசிய கண்டத்தை சேர்ந்த முதல் அணி என்ற சாதனையை படைத்தது இந்திய அணி.

ரோஹித் சர்மா 22 பந்துகளில், 2 பௌண்ட்ரிகளுடன் 17 ஓட்டங்களும், ஸ்ரேயஸ் ஐயர் 4 ஓட்டங்களும் சேர்த்து ஆட்டமிழக்காமல் இருந்தனர். முன்னதாக யஷஸ்வி ஜெய்ஸ்வால் 23 பந்துகளில், 6 பௌண்ட்ரிகளுடன் 28 ஓட்டங்கள் எடுத்த நிலையில் நந்த்ரே பர்கர் பந்திலும், ஷுப்மன் கில் 10 ஓட்டங்களில் ரபாடா பந்திலும், விராட் கோலி 12 ஓட்டங்களில் மார்கோ யோன்சன் பந்திலும் ஆட்டமிழந்தனர்.

7 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற இந்திய அணி 2 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் கிரிக்கெட் தொடரை 1-1 என சமனில் முடித்தது. செஞ்சூரியனில் நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க அணி இன்னிங்ஸ் மற்றும் 32 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருந்தது.

இதேநேரம்,

இந்தியா - தென்னாபிரிக்கா அணிகள் இடையே கேப்டவுனில் நடைபெற்ற 2-வது டெஸ்ட் போட்டியில் மொத்தம் 642 பந்துகளே வீசப்பட்டது. இதன் மூலம் டெஸ்ட் போட்டிகளில் மிக குறைந்த பந்துகளில் முடிவடைந்த போட்டியாக இது அமைந்தது. இதற்கு முன்னர் 1932ஆம் ஆண்டு அவுஸ்திரேலியா - தென்னாபிரிக்கா மெல்பர்ன் நகரில் மோதிய ஆட்டத்தில் 656 பந்துகள் வீசப்பட்டிருந்தன. (ஐ)




# சிறந்த டெஸ்ட் வீரர் பட்டியலில் அஸ்வின்!

டுபாய், ஜன. 06

ஐ. சி. சியின் 2023ஆம் ஆண்டுக்கான சிறந்த டெஸ்ட் வீரர் விருதுக்கான போட்டியில் இந்தியாவின் அஸ்வின் உட்பட நால்வர் இடம்பிடித்துள்ளனர்.

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ. சி. சி.) ஒவ்வொரு வருடமும் சிறந்த வீரர், சிறந்த வீராங்கனை, சிறந்த ஒரு நாள் அணி, இருபது -20 அணி, டெஸ்ட் அணி உள்ளிட்ட பல வேறு விருதுகளை வழங்கி வரு கிறது.

இதன்படி 2023ஆம் ஆண்டின் சிறந்த டெஸ்ட் வீரர் விருதுக்கு 4 பேரின் பெயர்களை ஐ. சி. சி. பரிந்துரைத்துள்ளது.

இந்த அணியில், இந்தியாவின் ரவிச்சந்திரன் அஸ்வின், அவுஸ்திரேலிய வீரர்களான டிராவிஸ் ஹெட், உஸ்மான் கவாஜா மற்றும் இங்கிலாந்தின் ஜோ ரூட் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். (ஐ)

# ஐ. சி. சியின் சிறந்த வீராங்கனை பட்டியலில் சமரி அத்தப்பத்து!




துபாய்,ஜன.06

ஐ. சி. சியின் சிறந்த வீராங்கனைகளுக்கான விருது பட்டியலில் இலங்கை அணியின் சமரி அத்தப்பத்து இடம்பிடித்துள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் சபையான ஐ. சி. சி. 2023ஆம் ஆண்டுக்கான சிறந்த வீராங்கனைக்கு வழங்கும் 'ரேச்சல் ஹெய்ஹோ பிளின்ட் டிராபி' விருதுக்கு நான்கு வீராங்கனைகள் கொண்ட பட்டியலை வெளியிட்டுள்ளது.

இதில் இலங்கையின் சமரி அத்தப்பத்து, இங்கிலாந்தின் நாட் ஸ்கிவர் பிரண்ட், அவுஸ்திரேலிய வீராங்கனைகளான ஆஷ்லே கார்ட்னர், பெத் மூனி ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.



# டெஸ்ட் தரவரிசை ஆஸி. முதலிடத்தில்!

டுபாய், ஜன. 06

சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளுக்கான அணிகள் தரவரிசை பட்டியலை ஐ. சி. சி. வெளியிட்டுள்ளது. இந்தப் பட்டியலில் இந்திய அணியை பின்னுக்கு தள்ளி அவுஸ்திரேலியா முதலிடத்தைப் பிடித்துள்ளது.

கேப்டவுனில் தென்னாபிரிக்காவுக்கு எதிராக நேற்றுமுன்தினம் நடைபெற்ற 2ஆவது டெஸ்ட் போட்டியில் இந்தியா வென்று தொடரை 1-1 என சமன் செய்தது. இதனால் புள்ளிப்பட்டியலில் அவுஸ்திரேலிய அணி இந்திய அணியை விட ஒரு புள்ளி கூடுதலாக பெற்று முதலிடத்தைப் பிடித்துள்ளது. இந்திய அணி 117 புள்ளிகளுடன் 2ஆவது இடத்தில் உள்ளது.

தென்னாபிரிக்க அணி 4-வது இடத்தில் நீடிக்கிறது. நியூசிலாந்து, பாகிஸ்தான், இலங்கை மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் அடுத்தடுத்த இடங்களில் உள்ளன. (ஐ)

# ஆஸியுடனான டெஸ்ட்; பாகிஸ்தான் தடுமாற்றம்!

சிட்னி, ஜன. 06

அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் பாகிஸ்தான் அணி 68 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்களை இழந்து தடுமாறி வருகின்றது.

அவுஸ்திரேலியா, பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான 3ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி சிட்னியில் நேற்று முன்தினம் தொடங்கியது.



நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் முதலில் துடுப்பெடுத்தாடி முதல் இன்னிங் சில் 313 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. முகமது ரிஸ்வான் 88 ஓட்டங்களும், அமிர் ஜமால் 82 ஓட்டங்களும் எடுத்தனர்.

அவுஸ்திரேலிய அணி சார்பில் பட் கம்மின்ஸ் 5 விக்கெட்டும், ஸ்டார்க் 2 விக்கெட்களும் வீழ்த்தினர்.

இதையடுத்து, முதல் இன்னிங்ஸை ஆடிய அவுஸ்திரேலியா 299 ஓட்டங்களில் சகல விக்கெட்களையும் இழந்தது லபுஷான் 60 ஓட்டங்களும், மிட்செல் மார்ஷ் 54 ஓட்டங்களும் எடுத்து வெளியேறினர். அலேக்ஸ் கேரி 38 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

பாகிஸ்தான் சார்பில் அமீர் ஜமால் 6 விக்கெட்களும், அகா சல்மான் 2 விக்கெட்களும் வீழ்த்தினர்.

14 ஓட்டங்கள் முன்னிலையில் உள்ள பாகிஸ்தான் 2ஆவது இன்னிங்ஸில் களமிறங்கியது. அவுஸ்திரேலியாவின் வேகப்பந்து வீச்சாளர் ஹசில்வூட் முன்னணி வீரர்களை ஆட்டமிழக்க செய்தார். அயூப் 33 ஓட்டங்கள், பாபர் அசாம் 23 ஓட்டங்கள் எடுத்தனர்.


இறுதியில், மூன்றாம் நாள் முடிவில் பாகிஸ்தான் 7 விக்கெட் இழப்புக்கு 68 ஓட்டங்கள் எடுத்து திணறி வருகிறது.

அவுஸ்திரேலியா சார்பில் ஹசில்வூட் 4 விக்கெட் கைப்பற்றினார்.

இன்னும் இரு தினங்கள் உள்ள நிலையில் எஞ்சியுள்ள 3 விக்கெட்டுகளை அவுஸ்திரேலியா கைப்பற்றி எளிதில் வெற்றி பெறும் என்று அந்த அணியின் ரசிகர்கள் எதிர்பார்த்துள்ளனர். (ஐ)

# புதிய ஏவுகணையால் ஆயுதப் போட்டியில் இந்தியாவை முந்துகிறதா பாகிஸ்தான்?

**உமர் பரூக், நியாஸ் பரூக்கி**



டிசம்பர் 27, 2023 அன்று பாகிஸ்தான் ஒரே சமயத்தில் பல ஏவுகணைகளை ஏவும் “பதா 2” ராக்கெட் சோதனையை வெற்றிகரமாக நிகழ்த்தியுள்ளது.

பாகிஸ்தான் ராணுவத்தின் செய்தி தொடர்புத்துறை (ஐஎஸ்பிஆர்) தகவல்களின்படி, இந்த ஏவுகணை 400 கிலோமீட்டர் வரை சென்று துல்லியமாக தாக்கக்கூடியது என்று கூறப்பட்டுள்ளது.

முன்னதாக ஆகஸ்ட் 24, 2021 அன்று, உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட “பதா 1” ராக்கெட் பாகிஸ்தானில் சோதனை செய்யப்பட்டது.

**பதா 2 ஏவுகணையின் சிறப்பம்சங்கள் என்னென்ன?**

ஐஎஸ்பிஆர் தகவலின்படி, பதா 2 ஏவுகணையில் மேம்படுத்தப்பட்ட பறக்கும் திறன் இடம்பெற்றுள்ளது. மேலும், இதில் மேம்படுத்தப்பட்ட டார்கெட் - டு - டார்கெட் தாக்குதல் அமைப்பு பொருத்தப்பட்டுள்ளது.

இந்த தனித்துவமான ஏவுகணையில் பொருத்தப்பட்டுள்ள இலக்கை தாக்கும் தொழில்நுட்பம் மிக துல்லியமாக தாக்கும் திறன் கொண்டது. அதோடு சேர்த்து அதன் பறக்கும் திறனும் அதை வலிமைமிக்கதாக மாற்றுகிறது.

இது போன்ற சிறப்பம்சங்களால் இந்த ஏவுகணை தனது இலக்கை துல்லியமாக தாக்கும் என்றும், அதன் குறியை தவறவே விடாது என்றும் ஐஎஸ்பிஆர் கூறுகிறது.

சில ராணுவ ஆயுதம் மற்றும் உபகரண நிபுணர்கள், இந்த பதா 2 ஏவுகணை “பிளாட் ட்ராஜெக்டரி ஏவுகணை” என்று அழைக்கின்றனர். அதற்கு அர்த்தம் இந்த ஏவுகணை கிடை மட்டமாக பறக்கக்கூடியது. ரேடாரில் தெரியாது.

இது குறித்து பாதுகாப்புதுறை நிபுணரான ஓய்வு பெற்ற பிரிகேடியர் சாத் முகமது பேசுகையில், பதா ஒரு ஃபிளாட் ட்ராஜெக்டரி ஏவுகணை, இதை ராடாரில் கண்டறிந்து அழிப்பது மிகவும் கடினம் என்று தெரிவித்துள்ளார்.

பாலிஸ்டிக் ஏவுகணைக்கென்று தனியான பாதை உண்டு, முதலில் அவை விண்ணில் பாய்ந்து பின்னர் பூமிக்கு திரும்பி வரும். அதன் பாதை மாறும் சமயத்தில் எதிரி ரேடார்கள் அதை கண்டறிந்து தாக்கும் என்கிறார் அவர்.

**இந்திய ஏவுகணை பாதுகாப்பு அமைப்பு**

பதா 2-இன் வெற்றிகரமான சோதனைக்கு பிறகு, அது இந்திய பாது காப்பு ஏவுகணை திட்டத்திற்கு எதிரான வலுவான ஆயுதமாக கருதப்படுவதாக கூறுகின்றனர் சில நிபுணர்கள்.

அதே போல் இந்தியாவும் சில காலமாகவே தங்களுடைய ஏவுகணை அமைப்புகளை மேம்படுத்துவதில் குறிப்பிடத்தகுந்த முன்னேற்றம் அடைந்து வருவதும் குறிப்பிடத்தக்கது. நீண்ட தூர எஸ்-400 ட்ரையம்ப் (Triumph) தவிர, உள்நாட்டில் உருவாக்கப்பட்ட குறுகிய தூரம் சென்று தாக்கும் சமர் மற்றும் டிஆர்டிஓ உருவாக்கிய VSHORADS ஏவுகணைகளையும் தனது பாதுகாப்பு அமைப்பில் சேர்த்துள்ளது இந்தியா. இவை அனைத்துமே மிகக் குறைந்த தூரத்தில் உள்ள இலக்குகளைத் தாக்கும் திறன் கொண்டவை. இந்த ஏவுகணைகள் கடல் பரப்பில் அதிகரித்து வரும் அச்சுறுத்தல்களுக்கு எதிராகவும் பயனுள்ளதாக இருக்கும்.

இந்திய செய்தி நாளிதழான ‘டைம்ஸ் ஆஃப் இந்தியா’ செய்தியின்படி, ‘எல்ஆர்எஸ்ஏஎம்’ என்ற பாதுகாப்பு ஏவுகணை அமைப்பை இந்தியா உருவாக்கி வருவதாக கூறப்பட்டுள்ளது. இந்த அமைப்பு ரஷ்யாவின் எஸ்-400 ட்ரையம்ப் போல வான் பாதுகாப்பு அமைப்பின் திறன்களைக் கொண்டுள்ளது.



இந்த அமைப்பில் நீண்ட தூர கண்காணிப்பு மற்றும் ரேடார் கட்டுப்பாட்டு திறன்கள் இருக்கும். மேலும் 150, 250 மற்றும் 350 கிமீ தொலைவில் உள்ள ஏவுகணைகளைக் கண்டறிந்து இடைமறிக்கும் ஆற்றலும் இதில் உள்ளது.

இந்தியா தனது பாதுகாப்பு அமைப்பில் உள்ள ஏவுகணை தொழில்நுட்பத்தை கொண்டு தனது நகரங்கள், அணுசக்தி அமைப்புகள் மற்றும் ராணுவத்தை பாதுகாப்பதற்கான திட்டத்தை வகுத்து வருகிறது.

இஸ்ரேலிடம் இருந்து அயர்ன் டோம் ஏவுகணை பாதுகாப்பு அமைப்பை வாங்க நீண்ட காலமாகவே ஆசைப்பட்டு வருகிறது இந்தியா. இந்நிலையில் அயர்ன் டோம் வாங்குவதில் இந்தியாவின் விருப்பம் குறித்த பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடங்க இஸ்ரேல் தயாராக இருப்பதாக டைம்ஸ் ஆஃப் இஸ்ரேல் 2013 ஜூலை மாதம் செய்தி ஒன்றை வெளியிட்டது. கார ணம், அந்த அமைப்பு உட்பட அதன் தொழில்நுட்பத்தை இந்தியாவுக்கு வழங்க ஒப்புக்கொண்டது இஸ்ரேல்.



ஒவ்வொரு நாடும் அயர்ன் டோமை வாங்க விரும்புகிறது, ஆனால் அது பணம் மற்றும் தொழில்நுட்பத்தைப் பொறுத்தது என்று கூறுகிறார் இந்திய ராணுவத்தின் ஓய்வுபெற்ற லெப்டினன்ட் ஜெனரல் மற்றும் பாதுகாப்புதுறை ஆய்வாளருமான எச்.எஸ்.பனாக்.

“உங்களிடம் பணம் மற்றும் தொழில் நுட்பம் இருந்தால், அதை நீங்களே உருவாக்கி கொள்ள லாம்,” என்று கூறும் அவர், அதே சமயம் இந்த செய்தி அறிக்கைகள் எச்சரிக்கையுடன் பார்க்கப்பட வேண்டும் என்கிறார்.

ஆவணங்களின் படி, இந்தியாவில் தொழில்நுட்பக் (பாதுகாப்பு) குறைபாடு உள்ளது. ஆனால் “ஒவ்வொரு நாளும் செய்தித்தாள்களில் நாங்கள் இதை உருவாக்கினோம், அதை உருவாக்கினோம் என்று பல செய்திகள் வருகின்றன. ஆனால் அடிப்படை உண்மைகள் வேறு” என்று கூறுகிறார் அவர்.

தலைநகர் டெல்லி அல்லது வர்த்தக மையமான மும்பை போன்ற முக்கியமான இடங்களை பாதுகாக்க இந்தியாவுக்கு இதுபோன்ற அமைப்பு தேவைப்படலாம் என்று கூறுகிறார் பாதுகாப்பு நிபுணர் ராகுல் போன்ஸ்லே.


“ஆனால் நாம் அது போன்ற அச்சுறுத்தலில் இல்லை, ஏனெனில் உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமெனில் இந்த அமைப்பு தற்போது ஹமாஸ் போன்ற அமைப்புகள் பயன்படுத்தும் ராக்கெட்டுகளுக்கு எதிராக சிறப்பாக செயல்படுகிறது” என்று அவர் கூறுகிறார்.

“பாகிஸ்தானுக்கு அதைச் செய்யும் திறன் உள்ளது, ஆனால் இதனால் அவர்களுக்கு என்ன பலன் கிடைக்கும்? அதனால் வரும் எதிர் வினையும் மிகக் கடுமையாக இருக்கும் என்பது வெளிப்படையாக தெரிந்ததே” என்கிறார் அவர்.

இது மிகவும் விலையுயர்ந்த பாதுகாப்பு அமைப்பு மற்றும் இந்தியா எதிர்கொள்ளும் அச்சுறுத்தல்கள் மற்ற நாடுகளில் இருந்து மிகவும் வித்தியாசமானது. மேலும், இந்தியாவில் ஏற்கனவே முக்கியமான மற்றும் தீவிரமான உள்கட்டமைப்பு பகுதிகளை பாதுகாக்கக்கூடிய பாதுகாப்பு அமைப்புகள் உள்ளன என்கிறார் ராகுல் போன்ஸ்லே.

இஸ்ரேலிய அயர்ன் டோம் அமைப்புகள் இந்தியாவிற்கு பலனளிக்காது என்பதற்கு மூன்று காரணங்கள் இருப்பதாக கூறியுள்ளார் பாகிஸ்தான் ஏவுகணைகள் மற்றும் அணு ஆயுத நிபுணர் சையத் முஹமத்.

அதில் முதலாவது காரணம் இந்தியா இஸ்ரேலை விட மிகப்பெரிய நில அமைப்பை கொண்டுள்ளது. இஸ்ரேல் போன்ற சிறிய பகுதிக்கு அயர்ன் டோம் நன்கு கைகொடுக்கும் ஆயுதம். ஆனால், அதே இந்தியா போன்ற பெரிய நாட்டுக்கு அது அவ்வளவு திறன்மிக்கதாக இருக்காது என்கிறார் அவர்.




இஸ்ரேல் ஹமாஸிடம் இருந்து வரும் ராக்கெட்டுகளை நிறுத்த இந்த அயர்ன் டோமை பயன்படுத்துகிறது. ஆனால், அந்த ஆயுதங்கள் இரண்டாம் உலக போரின்போது ஜெர்மானியர்களால் பயன்படுத்தப்பட்ட பழைய ரக ஆயுதங்கள் என்கிறார் அவர்.

மேலும், இந்தியாவோ சீனா மற்றும் பாகிஸ்தானிடமிருந்து இதை விட பல மடங்கு மேம்படுத்தப்பட்ட ஆயுதங்களின் அச்சுறுத்தலை கொண்டுள்ளன. அதற்கேற்றவாறு இந்தியாவிடமும் அதிநவீன எஸ்-400 ஏவுகணைகள் உள்ளன.

(16ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதி நிதியத்தினால் வழங்கப்படும் மருத்துவக் கொடுப்பனவுகள் அதிகரிப்பு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைவாக ஜனாதிபதி நிதியத்தினால் தற்போது வழங்கப்படும் மருத்துவ உதவிக் கொடுப்பனவுகளை 2024 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 50 வீதத்திலிருந்து 100 வீதமாக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 2024ஆம் ஆண்டு முதல் ஜனாதிபதியின் வழிகாட்டுதலுக்கு அமைய ஜனாதிபதி நிதியத்தின் மூலம் பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவைகளை விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி நிதியத்தின் செயலாளர் சரத்குமார தெரிவித்தார்.

இதன்படி, இதுவரை மருத்துவ உதவி வழங்கப்படாத நோய்கள் கண்டறியப்பட்டு, அந்த நோய்களுக்கான மருத்துவ உதவிகள் வழங்கும் பணி ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு முதல், 21 வயதுக்குட்பட்டவர்களுக்கு, தனியார் அல்லது அரை அரசாங்க வைத்தியசாலைகளில் கண் சத்திரசிகிச்சை மேற்கொள்வதற்கு மருத்துவ உதவி வழங்கப்படும்.

நோய்வாய்ப்பட்டவர்கள் மருத்துவ உதவி பெறுவதற்காக நகரத்திற்கு வருவதைக் குறைப்பதற்காக, நாடளாவிய ரீதியில் உள்ள வைத்தியசாலைகளின் ஜனாதிபதி நிதியத்தில் இலகுவாகப் பதிவு செய்யும் முறையும் 2024ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

கராபிட்டிய வைத்தியசாலையில் வேலை நேரத்தின் பின்னர் இருதய சத்திரசிகிச்சையை மேற்கொள்வதற்காக வழங்கப்படும் கொடுப்பனவு இந்த வருடம் முதல் அதிகரிக்கப்படவுள்ளதுடன் ஏனைய வைத்தியசாலைகளுக்கும் இந்த முறையை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு முதல் ராகம வைத்தியசாலையில் சிறு குழந்தைகளுக்கான கல்லீரல் மாற்று சத்திரசிகிச்சைகளுக்காக ஒரு மில்லியன் ரூபா வரையான மருத்துவ உதவி தொகையும் வழங்கப்படும். மேலும், தனியார் அல்லது அரை அரசு மருத்துவமனைகளில் மேற்கொள்ளப்படும் புற்றுநோய் அறுவை சிகிச்சைகளுக்கு இது வரை மருத்துவ உதவி வழங்கப்படாததோடு அதற்கான மருத்துவ உதவி இந்த ஆண்டு முதல் வழங்கப்படும்.

தனியார் அல்லது அரை அரசு மருத்துவமனைகள் தவிர, அரசு மருத்துவமனைகளும் இந்த ஆண்டு முதல் எலும்பு மாற்று அறுவை சிகிச்சைக்கு முன்பும் பின்பும் வெளியில் செய்யப்படும் மருத்துவப் பரிசோதனைகளுக்கு இந்த ஆண்டு முதல் மருத்துவ உதவி வழங்கப்படும்.

மருத்துவ உதவிகளை வழங்குவதில் நோயாளர்களின் குடும்ப அலகு ஒன்றின் மாதாந்த வருமான வரம்பான 150,000 ரூபாவை இந்த வருடம் முதல் 02 இலட்சம் ரூபாவாக அதிகரிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் மருத்துவ உதவி பெற வேண்டிய நடுத்தர மக்கள் ஜனாதிபதி நிதியில் இருந்து மருத்துவ உதவி பெற முடியும்.



இதேவேளை, 2023ஆம் ஆண்டிலும் மக்களுக்கான விரைவான மற்றும் விரிவான சேவைகளை வழங்குவதற்கு ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைய ஜனாதிபதி நிதியம் செயற்பட்டதாக அதன் செயலாளர் சரத் குமார தெரிவித்தார்.

2022 ஆகஸ்ட் முதல் பணம் செலுத்தாமல் குவிந்துள்ள 8,000 க்கும் மேற்பட்ட மருத்துவ உதவி விண்ணப்பங்கள் உட்பட, அந்த ஆண்டின் இறுதிக்குள், சுமார் 12,000 மருத்துவ உதவி விண்ணப்பங்களுக்கு நிதி வழங்கப்பட்டுள்ளது. இதற்காக 1,342 மில்லியன் ரூபா செலவழிக்கப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டிற்கு, 3458 மருத்துவ உதவி விண்ணப்பங்கள் பெறப்பட்டதோடு அந்த விண்ணப்பங்கள் அனைத்திற்கும் பணம் செலுத்தி முடிக்கப்பட்டுள்ளது. அதற்காக செலுத்தப்பட்ட தொகை 844.7 மில்லியன் ரூபா வழங்கப்பட்டது.

அதேபோல் 2022 ஆம் ஆண்டில் க.பொ.த சாதாரண தர பரீட்சையில் சித்தி பெற்றாலும் உயர்கல்வியை தொடர்வதற்கான நிவாரணம் தேவைப்படும் மாணவர்களுக்காக கல்விப் பிரிவொன்றுக்கு 30 பேர் என்ற அடிப்படையில் நாடளாவிய ரீதியில் 100 கல்விப் பிரிவுகளை சேர்ந்த மாணவர்களுக்கு 24 மாதங்களுக்கு 5,000 கொடுப்பனவும் வழங்கப்பட்டது.

அதற்கமைய அனைத்து மாதங்களிலும் பணிகளை ஆரம்பிக்கும் முதல் இரு தினங்களுக்குள் மாணவர்களின் வங்கிக் கணக்குகளில் பணம் வைப்புச் செய்து அவர்களுக்கு குறுஞ்செய்தி (SMS)மூலம் அறிவிக்கப்படும். தற்போது இந்த மாணவர்களுக்காக 10 மாதாந்த தவணை கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன.

அதேபோல் இம்முறை க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் சித்தி பெற்றிருந்தாலும் உயர்கல்வியை தொடர்வதில் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டிருக்கும் மாணவர்களுக்காக 50 கல்விப் பிரிவொன்றுக்கு 50 பேர் என்ற அடிப்படையில் 100 கல்விப் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட 5,000 மாணவர்களுக்கு 24 மாதங்களுக்கு 6,000 ரூபாய் கொடுப்பனவை மாதாந்தம் வழங்கும் வேலைத்திட்டமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய ஜனாதிபதி நிதியத்தினால் க.பொ.த பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு கல்வியை தொடர்வதற்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டியவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கும் வேலைத்திட்டம் ஒன்றும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இதனிடையே, கடந்த இரண்டு ஆண்டுகளில் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்று தேர்ச்சி பெற்ற மாணவர்கள், மாவட்ட அளவிலும், தேசிய அளவிலும் தெரிவு செய்யப்பட்டு, அந்த மாணவர்களுக்கு நிதியுதவி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன்படி 90 மாணவர்களுக்கு 31.5 மில்லியன் ரூபா நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

வறுமையில் வாடும் ஆனால் சுய தொழில் செய்யக் கூடிய குடும்பங்களை மேம்படுத்துவதற்காக பிரதேச செயலாளர்கள் ஊடாக நிதி மற்றும் பொருளுதவி வழங்கும் வேலைத் திட்டமும் ஜனாதிபதி நிதியத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டது.

மேலும், வறுமையில் வாடும் ஆனால் சுயதொழில் அல்லது பிற வேலைகளைச் செய்ய முடியாத குடும்பங்களை அடையாளம் காண, பிராந்திய செயலகங்கள் மூலம் மாதாந்தம் நிதி மற்றும் பொருள் உதவிகளை வழங்குவதற்கான திட்டங்கள் 2023 இல் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டன. சமய நல்லிணக்கத்தைப் பேணுவதற்கும் சமய நடவடிக்கைகள் மற்றும் ஏனைய சமூக நடவடிக்கைகளுக்கும் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், மருத்துவ உதவித் தொகையை செலுத்துவதில் ஏற்படும் தேவையற்ற காலதாமதத்தைத் தவிர்க்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குறைபாடுகள் இல்லாமல் பூர்த்தி செய்யப்பட்டு ஜனாதிபதி நிதியத்திற்கு ஒப்படைக்கப்படும் விண்ணப்பப் படிவத்திற்கு மூன்று வேலை நாட்களுக்குள் பணத்தை செலுத்தத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

மேலும், அறுவை சிகிச்சை/சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் நோயாளிகளுக்கு உத்தரவாதச் சான்றிதழ்கள் சில மணி நேரங்களுக்குள் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. அதன்படி, நோயாளிகள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மருத்துவ வசதிகளைப் பெற்று மருத்துவமனையை விட்டு வெளியேறும் போது, மருத்துவமனைகளுக்கு அந்த நிதியத்தால் செலுத்த ஒப்புக்கொள்ளப்பட்ட தொகையை மருத்துவக் கட்டணத்தில் இருந்து குறைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கிணங்க, இந்த பணிகளை நிறைவேற்ற நோயாளி/விண்ணப்பதாரர் ஒருமுறை மட்டும் ஜனாதிபதி நிதியத்திற்கு வருகை தந்தால் போதும் எனவும், எந்தவொரு விண்ணப்பதாரரும் தேவையில்லாமல் நிதியத்திற்கு அழைக்கப்படவோ அல்லது அசௌகரியங்களுக்கு உள்ளாக்கப்படவோ மாட்டார்கள் எனவும் ஜனாதிபதி நிதியத்தின் செயலாளர் சரத் குமார மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, 2024ஆம் ஆண்டு புத்தாண்டில் தமது கடமைகளை ஆரம்பிக்கும் ஜனாதிபதி நிதியத்தின் ஊழியர்களுக்கு ஆசி வழங்கும் நிகழ்வும் நேற்று முன் தினம் நிதிய அலுவலக வளாகத்தில் இடம்பெற்றது.

கொழும்பு ஹுனுப்பிட்டி கங்காராம விகாராதிபதி கிரிந்தே அஸ்ஸாஜி தேரர் தலைமையில் ஆசி வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்க, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, அமைச்சரவை செயலாளர் டொனால்ட் பெர்னாண்டோ, மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர் சுலக்ஷா ஜயவர்தன, திறைசேரியின் பிரதி செயலாளர் பிரியந்த ரத்நாயக்க, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் அசல ருவன் வீரகோன், ஜனாதிபதியின் தொழிற்சங்க பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னப்பிரிய உட்பட பலர் இதில் கலந்துகொண்டனர்.





# புதிய ஏவுகணையால்...

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனாலும், கூட அவர்களால் பாகிஸ்தான் ஏவுகணைகளுக்கு எதிராக முழுமையான பாதுகாப்பை வழங்க முடியாது என்கிறார் சையத் முஹமத்.

**புதிய ஏவுகணையால் முன்னிலை பெற்ற பாகிஸ்தான்**

பதா-2 ஏவுகணையின் வெற்றிகரமான சோதனை மூலம், ராணுவ அரங்கில், குறிப்பாக எல்லை அடிப்படையில் பாகிஸ்தான் ஓர் உச்சத்தை பெற்றுள்ளதாக, சில இந்திய பாதுகாப்பு நிபுணர்கள் நம்புகின்றனர்.

பாகிஸ்தானின் இந்த புதிய ஏவுகணை எல்லை அடிப்படையில் இந்தியாவை விட கூடுதல் நன்மையை பாகிஸ்தானுக்கு அளிக்கிறது என்றும், இது பாகிஸ்தான் இராணுவத்திற்கு நன்மையளிக்கும் என்றும் இந்தியாவின் பாதுகாப்பு பிரச்னைகளை அறிக்கையிடும் போர்ட்டலான இந்திய பாதுகாப்பு ஆராய்ச்சி பிரிவு தெரிவிக்கிறது.

'திறன் அடிப்படையில் பார்த்தால் , இது குறிப்பிடத்தகுந்த வளர்ச்சி' என்று கூறுகிறார் ராகுல் போன்ஸ்லே

"பாகிஸ்தானின் பதா-2 வானது, இந்தியாவின் பினகா மல்டி-பேரல் ராக்கெட் லாஞ்சரைப் போன்றது என்றும், "பாகிஸ்தானின் பீரங்கித் திறன்களை இது மேம்படுத்தும்" என்றும் அவர் சுட்டிக்காட்டுகிறார்.

இது இரண்டு நாடுகளுக்கும் இயல்பான வளர்ச்சிதான் என்று கூறும் அவர், இந்தியா உட்பட உலகில் உள்ள அனைத்து நாடுகளுமே மல்டி-பேரல் ராக்கெட் லாஞ்சர் அமைப்புகளை உருவாக்குகின்றன என்கிறார். இந்த ஆயுதங்கள் மிகவும் பயனுள்ளவை என்பதை ரஷ்யா - உக்ரைன் போர் நிரூபித்துள்ளது.

பாகிஸ்தானின் ஏவுகணை பாதுகாப்பு திறனை மேம்படுத்தும் நோக்கில், கடந்த இரண்டு மாதங்களில் பாகிஸ்தான் நடத்தியுள்ள இரண்டாவது ஆயுத சோதனை இது என்பதை உள்ளூர் மற்றும் சர்வதேச வல்லுநர்கள் ஒப்புக் கொள்கிறார்கள்.

2023 அக்டோபர் 18 அன்று, பாகிஸ்தான் அபாபில் ஏவுகணையை சோதனை செய்தது. இதுவே தெற்காசியாவில் பல அணு ஆயுதங்களை சுமந்து செல்லும் திறன் கொண்ட முதல் ஏவுகணையாகும்.

அணு ஆயுதங்கள் மற்றும் ஏவுகணை பாதுகாப்பு அமைப்புகளில் நிபுணரான சையத் முகமது அலியின் கூற்றுப்படி, அபாபில் மற்றும் பதா 2 ஆகிய இரண்டின் சோதனைகளும் பாகிஸ்தான் ஆயுதப்படைகளின் இராணுவ செயல்பாடு மற்றும் தொழில்நுட்ப தேவைகளை பூர்த்தி செய்கின்றன.






நீண்ட காலமாகவே இந்த பாதுகாப்பு அமைப்பை உருவாக்க அவர்கள் பணிபுரிந்து வருகின்றனர், தற்போது அதன் நம்பகத்தன்மையை சோதிக்க விரும்புகின்றனர். தொழில்நுட்பத் தேவை களைப் பூர்த்தி செய்த பிறகு, தற்போது இந்த ஆயுதத்தை இராணுவத்தின் செயல்பாட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக அதனிடம் ஒப்படைக்க விரும்புகிறார்கள்."

"இந்தியாவில் இந்த ஆண்டு தேர்தல் நடைபெறவுள்ள சூழலில் பாஜகவின் போர் மனப்பான்மையும் இதற்கான காரணங்களில் ஒன்று என்பதை எல்லை களை தாண்டி தினமும் வெளிவரும் அறிக்கைகளை வைத்து மதிப்பிடலாம். வழக்கமான பாணியில் தேர்தலுக்கு முன் இந்தியா எதுவும் தவறான நடவடிக்கை களை எடுக்கும் முன், பாகிஸ்தான் ராணுவத்தை மனதில் வைத்து கொள்ள வேண்டும் என்பதை உணர்த்துவதற்காக இருக்கலாம்" என்று கூறுகிறார் முஹம்மது அலி.

**தெற்கு ஆசியாவின் ஆயுதப் போட்டி**

"இந்த ஆயுத பந்தயம் ஒன்றும் புதிதல்ல, 1947ம் ஆண்டிலிருந்தே தொடர்வதுதான்" என்று கூறுகிறார் ஓய்வு பெற்ற பிரிகேடியர் சாத் முஹம்மது.

மேலும் சர்ஃபேஸ் டு சர்ஃபேஸ் ஏவுகணைகளை உருவாக்குவதற்கும், அவற்றைச் சுட்டு வீழ்த்துவதற்கான ஏவுகணைகளை உருவாக்குவதற்கும் உலகின் இராணுவப் படைகளுக்கு இடையே நிலவும் போட்டி மிகவும் பழமையானது. இந்தப் போட்டி தெற்காசியாவில் மீண்டும் மீண்டும் நடைபெற்று வருவதாக கூறுகிறார் அவர்.

பாகிஸ்தான் மற்றும் இந்தியா ஆகிய இருநாடுகளுமே தங்களது இராணுவ வளர்ச்சியில் மிகவும் உணர்திறன் கொண்டவை, மேலும் இரு நாடுகளும் தங்களது எதிரிகளை எதிர்கொள்ள உலகளாவிய கூட்டாளிகளுடன் இணைந்து உள்ளூரில் தொழில்நுட்ப திறன்களை வளர்ப்பதில் முதலீடு செய்து வருகின்றன.

